# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு ஆடி மாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 25-ம் இலக்கம்


## தூய வெண்ணுடை மாது

(பேராசிரியர்: எஸ். சுவாமிநாதன், M. A., L. T.,
அர்ச். சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை)

புனிதலூர்தன்னையின் இந்த நூற்றாண்டுவிழாவிலே, லூர்தன்னையைப் பற்றிப் பேசுமுன் ஒரு சிறு கதை சொல்லலாமென எண்ணுகிறேன். லண்டன்நகரிலே படித்துக்கொண்டிருந்த ஒருசகோதரனும், சகோதரியும ஓய்வு நாட்களை உல்லாசமாகக்கழித்துவரப் பிரான்சுக்குப் பயணமானார்கள். அங்கே சகோதரிசொன்னாளாம்: "அப்படியே லூர்துநகரில் மாதாகாட்சியளித்த இடத்தையும்காணச் செல்லலாமே" என்று. சகோதரன்: "அங்கு எதற்காக இப்பொழுது போகவேண்டும? பிறிதொருசமயம் பார்த்துக் கொள்ளலாமே" என்றானாம். ஆனால், சகோதரி விடவில்லை. அங்கேஅவர்கள் தங்கினது ஆறுநாள். அதிலே இரண்டு நாள்வரை அவர்களுக்குப் பக்திஉணர்ச்சியே தோன்றவில்லை. ஏனென்றால், உல்லாசமாகப் பொழுதுபோக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு வந்ததால்மூன்றாம்நாள்முதல்தான் அந்தரங்க உல்லாசஉணர்ச்சிகளை ஒடுக்கிப் பக்தி விசுவாசத்துடன் நான்குநாள் கோயிலுக்குப்போனார்கள். முதலில் அந்தக் கோயிலுக்கு எதற்காகப்போகவேண்டுமென்று கேட்டஅண்ணன் பிறிதொரு நாள் தன்சகோதரிக்கு எழுதியகடிதத்தில், "இந்தப்பூலோகத்தில்மோட்சத்துக்கு மிகச்சமீபமாகவுள்ள ஒரேஊர் லூர்துநகர்தான்"என்று குறிப்பிடுகிறான். ஏன்? அங்கேதான் மசபியேல் மலையில் பெர்னதெத்அம்மாளுக்கு மாதாகாட்சிதந்தாள் ஏன்? மாதா வேறொருஊரைத் தெரிந்தெடுத்திருக்கக்கூடாதா? ரோமாபுரியிலே ஆயிரமாயிரம்சிற்பிகள் தங்கள் சிற்பச்சிறப்பையெல்லாம்காட்டி இருக்கவில்லையா? அந்தலூர்துநகரில் மட்டும் அப்படி என்ன காந்தசக்தி? அது தாயின் விசேடஅன்புகொண்ட ஸ்தலம். ஆயிரக்கணக்கான அன்பர்களை அந்தத் தாயின் காந்தசக்தி கவர்ந்திழுக்கிறது.

பிறனீஸ்மலைமீது விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகமென்ற மூன்று ஞானஒளிகள் பிரகாசிக்க, "வா மகனே, வா!" என்று தன்மைந்தர்களை மாதாஅழைக்கிறாள். உலகிற்கு இரட்சணியந்தரத் தேவதாயின்செயல்களை மாதாவின்வாழ்விலிருந்து இரண்டு நிகழ்ச்சிகள்வாயிலாய்த் தரலாம்.

முதல்நிகழ்ச்சி நசரேத்ஊரிலே "கர்த்தர்உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே!" என்று சம்மனசுசொன்னதும், கனிகள்நிறைந்தமரம் தாழ்ந்ததைப்போல, புனியாஏவியம்போல் பணிந்து "சம்மதம்" என்று மாதாசொல்லவே, உலகிற்குஇரட்சணியம் உதயமாகிவிட்டது. அவ்வாறுஅவள் அப்போது ஒப்புக்கொள்ளாது இருந்திருந்தால் உலகிற்குஇரட்சணியம் கிடைத்திருக்குமா? அவள் ஆண்டவரின் தாய்தான் என்றபெருமையைப் பெற்றிருக்க முடியுமா?

இரண்டாவதுநிகழ்ச்சி கல்வாரியிலே சிலுவையில் திவ்வியயேசு தொங்கும் பொழுது, பக்கத்திலநின்றுகொண்டிருந்த சிஷியனைக்காட்டி, "ஸ்திரியே, இதோ உமதுமகன்" என்றார். மாதாவுக்குப் பரலோகபூலோக மகிமைகளையெல்லாம் உணர்த்தினார்.

லூர்துநகர்க்காட்சிக்கு வருவோம். மாதா யாருக்குக்காட்சிதந்தாள்? ஓர் அப்பாவிப்பெண்பிள்ளைக்குக் காட்சி தந்தாள். அந்தமலைச்சாரலில எப்படிக் காட்சிதந்தாள்? தூய வெண்ணுடை மாதாகத் தலையிலே வெள்ளைத்துகில் போர்த்து, நீலக்கச்சையணிந்து, கையிலே செபமாலைதொங்க, மோட்சத்தின்புன்சிரிப்புத் தந்துவந்தாள். அவளுடைய அந்தத்தோற்றம் இன்றைய விஞ்ஞானஉலகிற்கு — தற்காலநாகரிக உலகிற்கு ஒருமுன்மாதிரி. அது மோட்சநாகரிகம். அந்தத்தூயவெண்ணுடை நமதுசிந்தனையைத் தூண்ட வேண்டும். இன்று நாம் மானத்தைக் காக்க உடுத்துகிறோமா? மானத்தை விற்க உடுத்துகிறோமா? என்பதை எண்ணிப்பார்க்க வழிகாட்டுகிறதுஅந்த உருவம்.

மாதா அந்தஏழைச்சிறுமிக்கு ஏன் காட்சிதரவேண்டும்? பிரான்ஸ்நாட்டில் ஏராளமான பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிகள் இல்லையா? அப்படி அவர்களுக்குக் காட்சிதந்திருந்தால், மாதாஉடுத்தியிருப்பது நைலான் புடவையா, றேயான் பட்டாடையா? சோளிக்கை றவுக்கை போட்டிருக்கிறாளா? வேறெந்த மாதிரியோவென்று எண்ணியிருப்பார்கள். நாம் கோயிலுக்குப் போகும்பொழுது மாதாவின் இந்தத்தோற்றமே நமக்கொரு முன்மாதிரியாகும்.

மாதா அந்தச் சிறுமியைப் பார்த்து என்ன கேட்டாள்? "பதினைந்துநாட்களுக்குத் தயவுசெய்து இங்கு வருவாயா?" என்று கேட்டாள். மாதா கட்டளை இட்டிருக்கலாம். ஆனால், அப்படிச் செய்யவில்லை. மற்றவர்களாயிருந்தால் ஏன்வரவேண்டும்? என்ன காரணத்திற்காக வரவேண்டும்? என்றெல்லாம் கேள்விகேட்க ஆரம்பித்திருப்பார்கள். பெர்னதெத் அப்படிச்செய்யவில்லை. தேவசித்தத்திற்கு அமைந்து பிரமாணிக்கமாய்ச் செய்து காட்டிய முன்மாதிரியாக நடந்துகொண்டாள் — தன்னுடைய கடமையைச் செய்தாள்.

அங்கே அவளுக்கு மாதாசொன்ன ஆண்டவரின் செய்தி என்ன? மோட்சம் அடைய ஒரேவழி: "தபம் செய்யுங்கள்; விழித்திருந்து செபம்செய்யுங்கள்" என்பதுதான்.

செபமானது வீரமாமுனிவர் கூறியதுபோல,

"மண்ணோரை விண்ணேற்ற
விண்ணோர்விடுத்த கொடையோ?
அலகைதன் வல்வினையை
அறுத்தெறியும் அரும்படையோ?"

என்ற ஆற்றல் படைத்ததாகும்.

இந்தச்செய்தியை யாரிடம்போய்ச் சொல்லச்சொன்னாள் மாதா? "குருமாரிடம்போ; போய் இந்தச் செய்தியைச் சொல்லு" என்றாள். இங்கே மற்றொருபடிப்பினை மண்டிக் கிடக்கிறது. திருச்சபை அதிகாரிகளிடம் நாம்காட்டவேண்டிய மரியாதையைக் காட்டுவோம். எந்தஒருகாரியத்தையும் திருச்சபைஅதிகாரிகள்வாயிலாக நிறைவேற்றுவோம்; அவர்கள்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்போம் என்பதுமே அது! உடனே குருமார் அந்தச்செய்திக்குச் செவிசாய்த்தனரா? இல்லை. ஆனால், அவள் திரும்பத்திரும்பப் போனாள். இந்தச்செய்தியைக் கூடுதல் குறைச்சலின்றிச் சொன்னாள்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## யூகோசிலேவியாவும் கத்தோலிக்க சமயமும்

யூகோசிலேவியா கம்யூனிஸ்தநாடுகளில ஒன்று. ஆனால், ருஷியாவிலும், சீனாவிலும் காணப்படும கம்யூனிஸத்துக்கும், யூகோசிலேவியாவில் காணப்படும் கம்யூனிஸத்துக்கும் வித்தியாசமுண்டு. யூகோசிலேவியாவிலுள்ள கம்யூனிஸ்தார்கள் வரவர மேற்கத்தியநாடுகளுடன் அதிகஉறவு வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். குறிப்பாக வர்த்தகத்தில் அமெரிக்காவுடனும், மற்றும் மேற்கத்தியநாடுகளுடனும் யூகோசிலேவியா தொடர்பு வைத்துக்கொள்ளவிரும்புகிறது. இந்த ஆசையை எப்போதும் சாதனையில் காட்டித்தான்வருகிறது.

முதலாளித்துவ நாடுகளுடன் தொடர்புவைத்துக்கொள்ளக் கூடாதென்பது கம்யூனிஸ்த வேதாந்தங்களுள் ஒன்று. இதை யூகோசிலேவியா தான் முதன்முதல் உடைத்தது. சமீபத்தில் யூகோசிலேவிய அரசாங்கம் கம்யூனிஸ்த வேதாந்தக்கோட்டையின் மற்றொருஇடத்திலும் உடைப்பு ஏற்படுத்தியுள்ளது. வர்த்தகத்தில் யூகோசிலேவியா ஏற்படுத்திய உடைப்பைவிட இப்புதிய உடைப்புத்தான் அதிகம் முக்கியத்துவமுள்ளதாகும்.

கம்யூனிஸ்தார்கள்என்ற உடனேயே நமதுகண்முன் தோன்றுவது நாஸ்திகமே. மதவிவகாரங்களில் கம்யூனிஸ்தார்கள் மிகவும் கண்டிப்பாக நடக்கிறவர்கள். மதம் மனிதர்களுக்கு அபின் போன்றதுஎன்று கூறுகிறது கம்யூனிஸ்த வேதாந்தம். கோவில்கள், மடங்கள், மடாதிபதிகள், பூசாரிகள் ஆகியவைகளுக்கும் கம்யூனிஸத்துக்கும் வெகுதூரம். ஆனால், யூகோசிலேவியாவில் மதமும், கம்யூனிஸமும் பக்கத்திலே பையமெல்ல வந்துகொண்டிருப்பதாகச் சமீபத்தில்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. யூகோசிலேவியாவிலே தெருவில் காவல்செய்துகொண்டிருக்கும பொலிசார் ஒருகத்தோலிக்க குருவானவரைக்கண்டால் முகத்தைத் திருப்பிக்கொள்வது முந்திய வழக்கமாம். ஆனால், இப்போது அப்படிஎவரேனும் கத்தோலிக்க குருமாரைக்கண்டால் "சலூட்" அடித்து வணக்கமும் செய்கிறார்களாம் இந்தப் பொலிசார்கள்!

இரண்டாவது உலகமகாயுத்தம் ஆரம்பமானகாலமுதல் யூகோசிலேவியாவில் கத்தோலிக்க திருச்சபைக்கும், அரசாங்கத்துக்குமிடையில் "ஊடல்" இருந்துகொண்டுதான் வந்தது. இந்த "ஊடல்"வியாதியில் குறிப்பிடத்தகுந்தஅளவு குணம்காணப்படாவிட்டாலும்கூட வியாதி குணமடைவதற்கான அறிகுறிகள் ஆங்காங்கு காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது. யூகோசிலேவியாவில் இரண்டாவது உலகமகாயுத்தத்திற்குப்பின் கம்யூனிஸ்தஆட்சிவந்ததும் கத்தோலிக்க மேற்றிராணிமார்வழக்கமாக 5வருடங்களுக்கு ஒருதடவை ரோமாபுரிக்கு யாத்திரைசெய்வதைக் கம்யூனிஸ்த அரசாங்கம் தடைசெய்திருந்தது. அதன்நிலையைக்கண்டு அவர்களும் ரோமாபுரிசெல்வதற்கு அரசாங்கத்திடமிருந்து அனுமதிகோரவில்லை. ஆனால், யூகோசிலேவியா இப்போது வரவர வழிக்குவருவதைக்கண்டு கத்தோலிக்கமேற்றிராணிமார் இவ்வருடம் ரோமாபுரிக்குச்செல்ல ஆசைப்பட்டனர். அரசாங்கத்திடம் அனுமதி கேட்டனர். இந்தநோக்கமாக ரோமாபுரிசெல்வதற்கு அரசாங்கமும் "பாஸ்போட்" வழங்கிவிட்டது.

1939-ம் ஆண்டில் 2-வதுஉலகயுத்தம் ஆரம்பமானபிறகு யூகோசிலேவிய கததோலிக்க மேற்றிராணிமார் ரோமாபுரிசென்றதே கிடையாது. இந்த வருடம அவர்கள் யுத்தத்துக்குப்பிறகு முதல்தடவையாக அங்கு செல்லத் தொடங்கிவிட்டனர் கம்யூனிஸ்தஆட்சியைக் கவிழ்க்கச் சதித்திட்டங்களில் ஈடுபட்டுவருவதாக யூகோசிலேவிய அரசாங்கம் முன்னர் அடிக்கடி கத்தோலிக்ககுருமார்மீது குற்றஞ்சுமத்தி வந்தது. ஆனால், இந்தப்பல்லவியை இப்போது நிறுத்திவிட்டது. இந்தப் பிரச்சினையெல்லாம் நின்றுவிட்டதென்று ஒருதலைமைக் கம்யூனிஸ்த அதிகாரியே கூறியுள்ளார். யூகோசிலேவிய கத்தோலிக்க குருமார் சமய பாடசாலைகள்நடத்த அனுமதிஅளிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்கள். ருஷியாவுக்கும், யூகோசிலேவியாவுக்கும் தகராறு வலுத்துவருவதால்தான் இந்தமாறுதல் ஏற்பட்டதா அல்லது உண்மையிலேயே மனம்மாறித்தான் இப்படி நடந்துகொண்டதா யூகோசிலேவியாஎன்று திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. சமயத்துக்கும் கம்யூனிஸத்துக்குமிடையிலிருந்த "கெடுபிடி" யுத்தம் இந்தஅளவிலாவது தளர்ந்து வந்துள்ளதை எவரும் வரவேற்காமல் இருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனாவும் யூதர்களும்

பலஸ்தீனாவிலே யூதர்களின் இஸ்ராயேல்நாடு தான்ஸ்தாபகமான பத்தாம்ஆண்டு நிறைவுவிழாவை—அதாவது, தன்னுடைய பத்தாவதுபிறந்த பெருநாளைச் சமீபத்திலே கொண்டாடியது. அன்றுநிகழ்ந்த வைபவங்களிலெல்லாம், அதனுடைய இராணுவ பலத்தின் அணிவகுப்பும் ஒன்றாகும். இஸ்ராயேல்நாட்டிலே கடந்தபத்து வருடங்களிலும் எவ்வளவோகாரியங்கள் சாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலை, சமாதானம்என்பதே இல்லை. யூதர்கள் தங்களுக்கென்று ஓர்சுவநாட்டினை ஈட்டிக்கொண்டார்கள். ஆனால், இந்நாடு யூதர்களின் சமய கொள்கைகள் கைவிடப்பட்டுள்ள ஓர் யூதநாடாக—இஸ்ராயேல் நாடாகவே இன்றுகாட்சியளிக்கின்றது.

செல்வி எலிசபேத் ஹமில்ற்றன் எனும்மாது "பாதரட்சைகளைக் கழற்றிவிடு" எனும்நாமத்தைக் கொண்டதாய் எழுதியுள்ள புத்தகம்ஒன்றிலே தனது பலஸ்தீன்நாட்டு விஜயத்தைப் பற்றி வர்ணித்திருக்கின்றாள். அங்கே அவள் மனதிற்பட்ட காரியங்களில் ஒன்று, அந்நாட்டிற்போய்க் குடியேறியிருக்கின்ற யூதகுடும்பங்கள்மத்தியில் சமயம்என்பது மங்கிமறைந்து கொண்டு வருவதேயாகும். அங்கு யூதர்களேவசிக்கும் சமூகநிலையங்களுள் ஒன்றிலே இந்தமாது ஓர்யூதப் பெண்ணுடன் ஓர்அறையில் ஓர்நாள் தங்கியிருந்ததைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கின்றாள்.

"மறுநாட்காலை நான் நித்திரைவிட்டெழுந்து பார்த்தபோது, அந்தப் பெண் இன்னுமே நித்திரை செய்து கொண்டிருந்தாள்; அது யூதர்களின் ஓய்வுநாள்; இஸ்ராயேல் ஒருவன் ஓய்ந்திருக்கக்கூடிய ஒரேயொருநாள்; யூதர்கள் வழிபாடுநடத்தும் செபகூடமும் அங்கில்லை; ஓய்வுநாளிலே சமயானுசாரமுமில்லை; ஆனால், அந்த நாளிலே சமயவழிபாட்டில் தளர்ச்சியும், தொழில்செய்யவேண்டுமென்ற உணர்ச்சியுமே—அதாவது, லோகாயதமே தலைகாட்டியிருக்கின்றன. கடவுள்விசுவாசமே இத்தனைபல நூற்றாண்டுகளிலும் யூதசாகியம் அழிந்தொழிந்துபோகாது நிலைபெற்றிருக்கச் செய்துவந்தது; யூதருள்எவராவது தங்கள்வாக்குத்தத்தப்பூமியாகிய பலஸ்தீனாவுக்குத் திரும்பியதும் ஆயிரக்கணக்கான வருடங்களாகத் தங்கள்முன்னோர் கொண்டிருந்த சமய நம்பிக்கைகளை அகற்றிவிடுவதுதான் பெரும்அதிசயமாகும்."

"பாதரட்சைகளைக் கழற்றிவிடு" என்று இந்தமாது எழுதியபுத்தகத்தின் நாமமானது, பழையஏற்பாட்டிலே ஓர்நாள் மோயீசன் மந்தைகளை ஒரேபுமலைக்குஓட்டிக்கொண்டுபோக, அங்குதீப்பற்றிச் சுவாலித்து எரிந்துகொண்டிருந்த ஓர்புதரில் சர்வேசுரன் அவருக்குத் தரிசனையானபோது அந்தமுட்செடி வெந்துபோகாமல் இருப்பதை அவர்கண்டு அதிசயப்பட்டு அதைப்பார்க்கும்படியாக அருகே போனதும் "இது பரிசுத்தமான இடம்; உன் பாதரட்சைகளைக்கழற்றிவிடு" என்று சர்வேசுரன் சொல்லக்கேட்டசம்பவத்தையே குறிப்பதாகும்.

—*—

# சோவியற் ருஷியாவும் சமயங்களும்

கடந்த ஐப்பசிமாதம் முதலாவது செயற்கைச்சந்திரனை ருஷியா வான வெளிக்கு அனுப்பிவைத்தது. அதன்மேல் அது இந்தச்சாதனையைத் தனது நாஸ்திகபிரசாரத்துக்குப் பயன்படுத்திக்கொண்டது. எப்படி? "விஞ்ஞானந்தான் எல்லாம்; கடவுளும் இல்லை, ஒன்றுமில்லை" என்று மஸ்கோ வானொலி செய்திபரப்ப ஆரம்பித்தது. "மதமும், விஞ்ஞானமும்" என்றபேச்சுத்தொடரில் மஸ்கோவானொலி செயற்கைச்சந்திரனைப்பற்றி ஒருபேச்சை ஒலிபரப்பியது. "ஒவ்வொரு விஞ்ஞானியும் உண்மையிலேயே அவன் ஒரு விஞ்ஞானியாகஇருந்தால் தனதுசாதனையின்வாயிலாகக் கடவுள்இல்லைஎன்பதை நிரூபித்துக்காட்டுகிறான்; இந்த ஸ்பூட்னிக் யுகத்தில்கடவுளைப்பற்றி மதநூல்களிலுள்ள கட்டுக்கதைகள் யாவும் நம்பத்தகாதவைகள்." இவ்வாறு மஸ்கோவானொலி தன்குரலை ஒலித்தது.

விஞ்ஞானத்தைக்காட்டிச் சமய ஆசாரங்களைத்தாக்கும் ருஷியாவின் வழக்கம் புதிதன்று. முதன்முதலாக ருஷியாவில் ஆகாயவிமானங்கள் பறக்கத் தொடங்கியபோதும் கம்யூனிஸ்தர்கள் அதைத் தங்கள் நாஸ்திகக் கொள்கையை வளர்ப்பதற்குத்தான் பயன்படுத்தினார்கள். அப்பிரசாரத்தை ருஷியமக்கள் இன்றுவரை நினைவில்கொண்டுதான் இருக்கின்றார்கள். இதுதான் அவர்கள்கையாண்ட பிரசாரமுறை.

விவசாயிகளை விசேஷ விமானங்களில் ஏற்றிக்கொண்டுபோய்ப் "பார்த்தீர்களா, விண்ணுலகத்தை; விண்ணிலே தெய்வமோ, அல்லது தேவதூதர்களோ இல்லைஎன்பதை நன்றாகப்பாருங்கள்" என்றுசொல்லிக் காண்பித்தார்கள்.

கம்யூனிஸ்த தத்துவநூல்களை எழுதியவர்கள் தங்கள்நூல்களில் நாஸ்திகத்தைத்தான் வற்புறுத்திக் கூறியுள்ளனர். மதசுதந்திரம் அளித்தால் கம்யூனிஸம் உருப்படாதுஎன்பதைக் காள் மார்க்ஸும், லெனினும் கண்டுகொண்டார்கள். எனவே, 1917-ம் ஆண்டு கம்யூனிஸ்தர்கள் ருஷியாவில் அதிகாரத்தைக் கைப்பற்றிய உடனேயே மதஒழிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டார்கள்.

சமயமுறைப்படி திருமணஞ்செய்துகொள்வது செல்லாதென்று லெனின் சட்டம் பிறப்பித்தான். அதற்குஅடுத்த ஆண்டில் கூட்டங்களைத் தொடங்குமுன் ஆண்டவன்மீது துதிபாடுதல் கூடாதென்று லெனின் இன்னொரு சட்டம் பிறப்பித்தான். அத்துடன் எந்தப்பாடசாலையிலும் சமயபோதனை கூடாதென்றும் ஓர்தடைபிறந்தது.

1923-ம்ஆண்டுக்குள் 28மேற்றிராணிமார்களும், ஆயிரவருக்கு அதிகமான சமயகுருவர்களும் கம்யூனிஸ்தஆட்சியினரால் மரணதண்டனை விதித்துத் தூக்கிலிடப்பட்டனர். கிறீஸ்துவ வழிபாடுகளைப் பகிரங்கமாகப் பழிப்பதற்குக் கம்யூனிஸ்தர்கள் தங்கள்ஆட்களைத் தயார்செய்து ஏவிவிட்டார்கள்.

சர்வகலாசாலைமாணவர்கள் நாடகங்கள்நடித்து அவைகள்மூலம் எல்லா மதங்களையும் கேலிசெய்தனர். கத்தோலிக்ககோவில்களிற்கூட மதபோதனை நடத்தக்கூடாதென்று சோவியற் அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது. சோவியற்ருஷியாவில் தேவாலயங்கள் களியாட்டவிடுதிகளாக மாற்றப்பட்டுள்ளன. சோவியற் ருஷியாவில் பள்ளிவாசல்கள் நாடகக்கொட்டகைகளாக ஆக்கப்பட்டுள்ளன. சிலவற்றை மாத்திரம் விட்டுவைத்து "இதோ பாருங்கள் பள்ளி[illegible]லும் இஸ்லாம் தழைக்கிறதைப்பாருங்கள்" என்று வெளிநாட்டாருக்குச் சொல்லிவருகின்றனர்" என்று ருஷியாவிலிருந்து தப்பியோடிவந்த முஸ்லீம் தலைவர் முஹம்மது அமீன் புர்கா கூறியுள்ளார். கடவுளைப் பகைவனென்று கருதும் கம்யூனிஸ்தர்கள் இப்படிச் செய்வதில் ஆச்சரியமொன்றுமில்லை.



# பல தேசங்களில்

## ஓர் அதிசய கடிகாரம்

கன்னியாகுமரி மாவட்டத்திலே அரக்கன் குழியைச்சேர்ந்த திரு. எஸ். சவரியானந்தம் என்ற சாரதிஒருவர் உலகநாடுகளின் நேரத்தை ஒரே சமயத்தில் பார்க்கக்கூடிய கடிகாரம் ஒன்றைச்செய்துள்ளார். டில்லி, காராச்சி, மெக்கா, மஸ்கோ, லண்டன், நியூயோக், சிட்னி, ரோக்கியோ, பீக்கிங், ஐஸ்லாந்து, ஜோர்ஜ்ரவுண், சிக்காகோ, மெக்சிக்கோ, ஹானலூலூ, வெலிங்ரன், மனிலாமுதலிய இடங்களின் நேரத்தை ஒரேசமயத்திலே இக்கடிகாரத்தில் காணலாம். இவ்விடங்களில் இரவா பகலா என்பதையும் அக்கடிகாரத்தில் அறிந்துகொள்ளலாம். 30ரூபா செலவில் ஒரு மாதகாலத்தில் அவர் இந்தக் கடிகாரத்தைச் செய்தார்.

## ஆசியநாடுகளும் கம்யூனிஸ்தரும்

ஆசியாவிலே கம்யூனிஸ்தர்கள் செய்துகொண்டுவரும் தந்திரோபாயங்களையெல்லாம் செஞ்சீனாஅல்ல, சோவியற் ருஷியாவே கட்டளைகொடுத்து நடத்திக்கொண்டு வருகிறதுஎன்று சுதந்திர சீனாவின் ஜனாதிபதியான சியாங்கைஷேக்கின் பாரியார் சென்றசனிக்கிழமை தெரிவித்திருக்கின்றார். அவர் மேலும்கூறியதாவது: கிறெம்லின் (சோவியற்அதிகாரபீடம்)என்னசொல்லுகிறதோ அதைப்பீக்கிங் (செஞ்சீனா) செய்துமுடிக்கிறது. தைபான் (சுதந்திரசீனா)மீது செஞ்சீனா படையெடுப்பது ருஷியாவின் நோக்கத்துக்குத் தற்போது உகந்ததாயில்லை. கம்யூனிஸத்தை எதிர்த்துப்போராடும் எல்லா நாடுகளுக்கும், எல்லாமக்களுக்கும் சுதந்திரஉலகம் ஆதரவளிக்கவேண்டும்" என்பதே.

## அணுக்குண்டு நிபுணரின்கதி

அணுக்குண்டுகளைத் தயாரிப்பதிலே உதவிசெய்த டொனல்ட் பிளான்டேர்ஸ்என்ற பிரசித்திபெற்ற கணித சாஸ்திர நிபுணர் சிக்காகோநகரிலே சென்றசனிக்கிழமை இறந்துகிடக்கக் கண்டறியப்படலாயினர். அணுச்சக்திக்கம்மிஷனின் ஆர்கோனிய தேசிய ஆராய்ச்சிச்சாலைக்குப் புள்ளிவிபரங்கள் கணக்கிடும் "மின்சாரமூளை"க்குப் பொறுப்பாளியாக இருந்தவர் இவர்தான். தாம்இறக்குமுன் விட்டுச்சென்ற ஓர்குறிப்பில் இவர்தெரிவித்திருப்பதாவது: "நான் இருப்பதைவிட இறந்துவிடுவதே மேல். நான் செய்தவைகளுக்காக மனவருத்தப்படுகிறேன். ஆனால், அவைகளைச்செய்து முடிக்கக் கடமைப்பட்டிருக்கேன்" என்பதே. மிதமிஞ்சித் தூக்கமருந்துகள் உட்கொண்டே இவர் தற்கொலை செய்துகொண்டாரெனத் தெரியவருகிறது.

## கந்தல்அங்கிக்குக் கார்ப்பரிசு

அண்மையில் லூர்துபதிக்குச்சென்றிருந்த திருயாத்திரைக் குழுஒன்றில் பரீஸ்நகர பிரமுகர்ஒருவர் கலந்துகொண்டார். தம்மைச் சூழ்ந்திருந்தவர்கள் அனைவரும் கிறீஸ்துவஅன்புடனும், சகோதரவாஞ்சையுடனும் பிணியாளருக்குத்துணைபுரிந்து அவர்களைத் தள்ளுவண்டிகளில் ஏற்றிச்சென்ற காட்சி அவர்உள்ளத்தை உருக்கிற்று. இந்தநிலைமையிலே அவர் கிழிந்துபோன அங்கிதரித்திருந்த குருவானவர்ஒருவரை அக்கும்பலில்கண்டு அவரை அணுகி, "உமக்கு ஒருமோட்டர்கார் இருக்கின்றதா?" என்று வினவினார். "இல்லை" என்று பதில்கிடைத்தது. "நீர் பலவிசாரணைப்பங்குகளைக் கண்காணிக்கும் குருவானவரா?" என்று இரண்டாவது கேள்விபிறந்தது. "ஆம்" என்று பதிலிறுத்தார் குருவானவர். "அப்படியானால் இருகுதிரைப்பலம்வாய்ந்த ஒருமோட்டர்காரை உமக்குநான் அன்பளிப்பாகத்தருகின்றேன்" என்றார் பிரமுகர். அவர் சொன்னபடியே விரைவில் இந்தஅன்பளிப்பை அனுப்பிவைத்துள்ளார்.

## திருப்பண்ட அன்பளிப்பு

லூர்துபதியிலே தரைமட்டத்தின்கீழ் எழுப்பப்பட்டுள்ள நூற்றாண்டு விழாநினைவுச்சின்னமாகிய மகாதேவாலயத்தில்வைத்து வணங்கப்படுமாறு பரிசுத்தபாப்பரசர் அர்ச். 10-ம் பத்திநாதரின் திருப்பண்டம்ஒன்றை அழகியபேழைக்குள்வைத்து அன்பளிப்பாக அனுப்பியிருக்கின்றார். றோமாபுரியிலே அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்தின் ஒரு தனிப்பீடத்தில் இருந்துவருகின்ற அர்ச்சியசிட்டரது அழியாதஉடலின் கரத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட ஒரு துண்டுதான் இந்தத்திருப்பண்டம். அர்ச். 10-ம் பத்திநாதர் போரால் அபிஷேகஞ்செய்யப்பட்டுள்ள லூர்துபதிப் புதியமகாதேவாலயத்திலே அவருடைய திருப்பண்டம்வைத்து வணங்கப்படுவது மிகப் பொருத்தமான[illegible] மேலும் 1908-ம்ஆண்டு லூர்துதரிச[illegible] பொன்விழாவைக் கொண்டாடிய பாப்பானவரும் அவரே.

## கேரள கல்விச் சட்டம்

கேரள கல்விச் சட்டத்தைப் பற்றிப் பிரதம நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்தின்படி, அதிலே சிலதிருத்தங்கள்செய்து தமக்குத் திருப்பியனுப்புமாறு இந்திய குடியரசுத் தலைவர் கேரள அரசாங்கத்துக்குக் கட்டளையிடுவார் என்று இதுவரை எதிர்பார்க்கப்பட்டது. கேரள அரசினரும் அவ்வாறுதான் நடக்குமென எண்ணி மனப்பால் குடித்துவந்தனர். ஆனால், இப்பொழுது டில்லியில் வேறுவிதமான போக்கு உருவாகிவருவதாகத் தெரியவருகின்றது. நீதி மன்றத்தின் கருத்தை அனுசரித்து புத்தம்புதிதாக ஒருசட்டத்தைத் தயார்செய்யுமாறு குடியரசுத் தலைவர் ஆணையிடுவார்; பழையமசோதாவை முற்றிலும் தள்ளும்படி செய்துவிடுவார் எனத் தோன்றுகின்றது. இது கேரள கல்விச் சட்டத்தை உருவாக்கியவர்கட்கும், ஆதரித்தவர்கட்கும் தலையில் விழும் மற்றொரு அடியாகும். நிற்க, கல்விச்சட்டத்தை மாற்றியமைக்கக் கேரளஅரசாங்கம் முடிவுசெய்திருப்பதாகக் கேரளமுதன்மந்திரி ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட்டும் அறிவித்திருக்கின்றார். அச்சட்டத்தின் சிலஅம்சங்களைப் பிரதமநீதிமன்றம் ஆட்சேபித்ததை முன்னிட்டுத்தான் கேரளமந்திரிசபை இந்தமுடிவிற்குவந்தது. பிரதமநீதிமன்றத்தின் ஆலோசனைப்படி, இந்தச் சட்டம் திருத்தப்படவேண்டுமா? அன்றேல்புதியசட்டம் தயாரிக்கப்படவேண்டுமா? என்பதுபற்றி இந்தியஅரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அறிக்கை கிடைத்தபின்னரே முடிவு செய்யப்படுமென்றும் முதன்மந்திரி கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூகோசிலேவிய மேற்றிராணியாரின் ரோமாபுரித் தரிசனை

கம்யூனிஸ்தநாடுகளில் ஒன்றாகிய யூகோசிலேவியாவிலே சாகிறெப்நகர் உதவிமேற்றிராணியாரான செபர்ஆண்டவர் தமது காலாந்தர தரிசனைநிமித்தமாகச் சமீபத்திலே ரோமாபுரிபோய்ச் சேர்ந்திருக்கின்றார். சுமார்பத்து வருடகாலத்தில் யூகோசிலேவிய மேற்றிராணியார் ஒருவர் தமது காலாந்தர வத்திக்கான் தரிசனைக்குச் செல்லக்கூடியதா யிருந்தது இதுவேமுதன்முறையாகும். இவரின் தரிசனையைத்தொடர்ந்து பெல்கிறேட்நகர் யுஜ்சிக்அதிமேற்றிராணியாரும்; லிஜுபிள்ஜானு மேற்றிராசனத்தின் அப்போஸ்தலிக்கபரிபாலனரான வொவ்க் மேற்றிராணியாரும் ரோமாபுரி செல்வார்களென எதிர்பார்க்கப் படுகிறது.

## தொழிலாளரின் சர்வதேச யாத்திரை

லூர்துபதி நூற்றாண்டுவிழா வருடத்துப் பெருஞ்சம்பவங்களிலே, தொழிலாளர்களின் குடும்பங்கள் அப்பதியில் பெருந்திரளாக ஒன்றுகூடவிருப்பதும் ஒன்றாயிருக்கும். வருகிறஆவணி மாதம் 15-ம், 16-ம், 17-ந் திகதிகளிலே பிரான்ஸிலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும் தொழிலாளர் குழாங்கள் அங்குசமுகமாயிருந்து விறகும், பழையஎலும்புகளும் சேகரிக்கச்சென்றிருந்த பேர்னதெத்அம்மாளுக்குத் தேவதாயார் காட்சியருளிய திருக்கெபியடியிலே செபவேண்டுதல் நடத்தவிருக்கின்றன. மக்கள்வேலைசெய்கின்ற அதேயிடங்களிலே—அவர்களின் நாளாந்தவாழ்க்கையிலே பரிசுத்தகன்னிமரியம்மாள் அளித்துவரும் இடையறாத பாதுகாப்பை அவர்களின்யாத்திரை பிரதிபலிப்பதாயிருக்கும். இந்த யாத்திரைக்கென்று பதினேழு புகையிரதங்கள் ஏற்கனவே ஒழுங்குசெய்யப் பட்டிருக்கின்றன.

## பாத்திமா நாயகியின் பாரிய சுரூபம்

ஓர்அமெரிக்க தொமினிக்கன் சபைக்குரவரான வண. தோமஸ் மைக்கிளின் சுவாமியாராலே செதுக்கப்பெற்ற பாத்திமாநாயகியின் உண்மையானரூபமான பதினைந்தரைஅடி உயரமுள்ள சுரூபமானது பாத்திமாபதி மகாதேவாலய படிகளில் அமைந்துள்ள ஆதாரபீடத்திலே நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றது. போர்த்துக்கேய ஆகாயப்படைகளின் பாரந்தூக்கும் துலாயந்திரங்கள் அதனைமெதுவாகத்தூக்கி எடுத்து ஆதாரபீடத்தில்ஸ்தாபித்தன. பாத்திமாபதியிலே தேவதாயார்காட்சியளித்த மூன்றுபிள்ளைகளிலும் தற்சமையம் உயிர்வாழ்ந்திருக்கும் சிஸ்றர் லூஸியாவால் தமக்குக் கொடுக்கப்பட்ட வர்ணனைப்படியே சுவாமியார் இந்தச்சுரூபத்தைச் சிறந்த சலவைக்கல்கொண்டு செதுக்கலாயினர். அது ஸ்தாபிக்கப்பட்டதும் சுவாமியார் அதன் ஆதாரபீடத்தில் அமைக்கப்பட்டிருந்த பலிபீடத்திலே அதனைச்செதுக்கும் செலவிற்கென்று பணம்உபகரித்த ஆயிரக்கணக்கான பேர்களுக்காகத் திவ்வியபூசை நிறைவேற்றினர். சுரூபத்தை ஸ்தாபிக்கும் திருச்சடங்கு தேவதாயார்அளித்த முதலாவதுகாட்சியின் 41-வது நிறைவுதினமன்று நடைபெறலாயிற்று.

### வேதத்துக்காக உயிர்துறந்த
## மரியாயின் சேனையாளர்

மரியாயின்சேனை அங்கத்தவர்களிலே ஆயிரம்பேருக்குமேற்பட்டவர்கள் தங்கள் வேதத்துக்காகத் தங்கள் உயிரைத் தியாகஞ்செய்திருக்கிறார்களென்றும், பதினாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் சிறைவாசஞ்செய்து வருகிறார்களென்றும் கோறியாவிலே குவாங்ஜூநகர் விக்கார் அப்போஸ்தலிக்குவான ஹென்றி மேற்றிராணியார் தெரிவிக்கின்றார். தமதுசொந்த விக்காரியத்திலே மரியாயின்சேனை ஆற்றிவரும் தொண்டுகளைப் பற்றிப் பேசியபோது, தமக்கு மிகஅதிகமாக உதவி செய்துள்ள ஸ்தாபனம் அதுவேயென்று அவர் கூறியிருக்கிறார். இவரும், 25 விசாரணைப்பங்குகளிலே தொண்டாற்றிவருகின்ற இவருடைய 35 குருமாரும் சென்றவருடத்திலே வளர்ந்தவர்களான 7,000 பேருக்கு வேதசத்தியங்களைப் படிப்பித்து, அவர்களுக்கு ஞானஸ்நானம் அருளியிருக்கின்றார்கள். இந்தவருடத்திலோ வேறும் 15,000 பேருக்கு ஞானஸ்நானம் அருளலாமென அவர்கள் நம்புகிறார்கள். தற்போது இந்த விக்காரியத்தில் ஞானஸ்நான ஆயத்தகாரராய் 20,000 பேர் இருந்துவருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் ஞானஸ்நானம் பெறுமுன் குறைந்தபட்சம் ஆறு மாதகாலத்துக்கு வேதசத்தியங்கள் படிப்பிக்கப்படும்.

# கத்தோலிக்க சமாச்சாரம்

## முதல் நன்மை பெற்ற நூற்றாண்டு விழா

அர்ச். பேர்னதெத் அம்மாள் 1858-ம் ஆண்டு ஆனிமாதம் 3-ந் திகதி தேவநற்கருணைத் திருநாளன்று முதல்நன்மைபெற்றாள். லூர்துபதியின் யூபிலிவருடத்திலே இந்தநூற்றாண்டுவிழாவும் மறக்கப்படாததாயிற்று. ஆனால், எவர்க்குமே அதிகம்பிரமிப்பை விளைக்கும் ஓர்காரியம் உண்டு. அதாவது, பேர்னதெத்அம்மாள் 1844-ம் ஆண்டு தைமாதம் 7-ந் திகதியன்று பிறந்தாள். அதனால் அவள்முதன்முதலாக நற்கருணைப் பந்தியில் அமர்ந்தபோது பதினாலரைவயதுடையவளாய் இருந்தாள். அவள்முதன்நன்மைபெறக் காலதாமதம் அவ்வளவாக ஏற்படக்காரணமென்ன? மற்றொன்றுமல்ல; ஆனால், அவள் குடும்பம் சீவித்துவந்த சகிக்கவாற்றாத தரித்திரநிலைமையேயாகும். பிள்ளைகளிலெல்லாம் மூத்தவளானபேர்னதெத் தனதுசகோதரர், சகோதரிகளைக் கவனிக்கவும், வெளியேசென்று விறகு சேகரிக்கவும், காலந்தோறும் பாட்றெஸ்எனுமிடத்திலே மந்தைகளைப் பராமரிக்கவும் வேண்டியிருந்ததால் பாடசாலைசென்று ஞானோபதேசம்படிக்க இயலாதவளானாள். ஆனால், முதன் நன்மைபெற வேண்டுமென ஆசைகொண்ட பேர்னதெத் அதற்கு ஆயத்தஞ்செய்யுமாறு தனதுவிருப்பத்தைப் பெற்றோருக்குத்தெரிவித்து, லூர்துபதிக்குத் திரும்பச்சென்று, பாடசாலையில்சேர்ந்து ஞானோபதேசவகுப்பிலே தனதுபெயரைப் பதிவுசெய்து, மிகுந்தகஷ்டத்துடன் படித்து 1858-ம் ஆண்டு ஆனி மாதம் 3-ந் திகதி மிகுந்தபயபக்தியுடன் முதல்நன்மைபெற்றுக் கொண்டாள்.

### பாப்புமார் ஐவரைச் சந்தித்த
## வயோதிப குருவானவா

முன்னர் நான்குபாப்புமாரைச் சந்தித்து, அவர்களைத் தமது கண்ணாரக்கண்டவரும், மிலான் நகரைச் சேர்ந்தவருமான 95 வயதுடைய வண. லூய்ஜி சால்வியோனிஎனும் விருத்தாப்பிய குருவானவர் சமீபத்திலே ஐந்தாவதுபாப்பானவராகப் 12-ம்பத்திநாதபாப்பரசரைச் சந்தித்தபோது, "எனது ஈறுந்த பெரிய விருப்பம்" நிறைவேறிவிட்டதெனக் கூறலாயினர். தம்மைவிட்டுப் பிரிந்தேகுமுன் பரிசுத்தபிதா இந்தவிருத்தாப்பிய குரவருக்குஓர்விசேஷஆசீர்வாதம் அருளலாயினர். வத்திக்கான் மாளிகையிலே தமக்கு அருளப்பட்ட வரவேற்பையிட்டுச் சுவாமியார் தமக்குண்டான பெருமகிழ்ச்சியைத் தம்முடன்வந்தவர்களுக்குத் தெரிவிக்கலாயினர். அவர் விசேஷபேட்டி அருளப்பெற்று, பாப்பரசருடன் சல்லாபிப்பதிலே சிறிதுவேளையைச் செலவிடலாயினர். 1878-ம்ஆண்டு தமதுஆட்சியைத்தொடக்கிய 13-ம்சிங்கராயர், அர்ச். 10-ம்பத்திநாதர், 15-ம்ஆசீர்வாதப்பர், 11-ம்பத்திநாதர்எனும்நால்வருமே அவர் சந்தித்தருளிய முந்தியநான்கு பாப்புமாருமாவர்.

## ரோமை நகரும் சினிமாக்களும்

ரோமைநகரம் அர்ச்சியசிட்டர்களின் நாமங்களைக் கொண்டனவாய் எழுபதுசினிமாப் படக்காட்சிச்சாலைகளைக் கொண்டிருக்கின்றது. இவைகளெல்லாம் விசாரணைப் பங்குகளாலே நடத்தப்படுகின்றன. ரோமைநகரின் விக்கார் ஜெனறலான கருதினல் மிக்காரு ஆண்டவரால் நிர்மாணிக்கப் பெற்றுத் தியேற்றர் உதவிச் சேவையால் நடத்தப்பட்டுவருகின்ற இத்திட்டமானது ஆன்மகெடுதிகளை உண்டுபண்ணும்தகாத சினிமாப்படங்கள் பரம்புவதைத் தடுத்துப் போராட்டம் நடத்தும் நோக்கமாகவே வகுக்கப்படலாயிற்று. ரோமை நகரிலுள்ள மிகப்பெரும்பான்மையான விசாரணைப்பங்குகள் ஒவ்வொன்றும் தனதுபெயர் கொண்ட அர்ச்சியசிட்டரின் பேரால் ஒவ்வோர் சினிமாப்படக் காட்சிச்சாலையைக் கொண்டிருக்கிறது. இவற்றிலே அறவிடப்படும் பிரவேசச்சலார் அதிகம் குறைந்ததாகும். சில படக்காட்சிச்சாலைகள் சிறியனவாகும். சில ஆயிரம்பேருக்கு இடவசதியளிக்கக்கூடிய பெரியனவாகும். பெரியகாட்சிச்சாலைகள் இலாபத்துடன் நடத்தப்படுகின்றன. இந்த ஆதாயம் விசாரணைப்பங்கின் செலவுகளுக்கு உதவியாகின்றது. ஆனால், பெரும்பாலானவை நயநட்டமின்றியே நடைபெற்றுவருகின்றன. சினிமாப்படக் காட்சிச் சாலைகள் வாரத்தில் மூன்று நாட்களிலும், விடுமுறை நாட்களிலுமே திறந்துவைத்துக் காட்சி காண்பிக்கப்படுகிறது. அவைகளைப்பற்றிப் புதினப் பத்திரிகைகளில் விளம்பரஞ்செய்யப் படுவதில்லை. கோவில்களுக்கு வெளியேமாத்திரம் சிறுகப் பிரசித்தஞ்செய்யப்படுகிறது.

## ஐக்கியஅமெரிக்கதேசமும் கத்தோலிக்கரின் விருத்தியும்

ஐக்கியஅமெரிக்கதேசத்திலும், அதனைச்சேர்ந்த அலஸ்காவிலும், ஹவேயன் தீவுகளிலும் சென்ற 1957-ம் ஆண்டிலே கத்தோலிக்கரின் தொகை 14,60,126 பேரால் அதிகரித்து, 3 கோடியே 60 லட்சத்து 23 ஆயிரத்து 977 பேராகியிருப்பதாக அமெரிக்க கத்தோலிக்க வெளியீடு அறிவித்திருக்கின்றது. ஆனால், அரசாங்க குடிசனமதிப்புக் கருமசாலையோ மற்றும் 90 லட்சம் அமெரிக்க மக்கள் தங்களைக் கத்தோலிக்கரெனக் கருதுவதாகத் தெரிவித்திருக்கிறது. சென்றவருடத்திலே அத்தேசத்தில் மறு சமயங்களிலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்கரானோர் தொகை 1,40,414 பேராவர். அங்கே கடந்த பன்னிருவருடங்களிலும் தொடர்ந்து வருடந்தோறும் ஒருலட்சம் பேருக்குமேல் மனந்திரும்பியிருக்கின்றார்கள். அங்கே குருமார் தொகையும் சென்றவருடத்திலே 1,088 பேரால் அதிகரித்துத் தற்போது 50,813 பேராகியிருக்கிறது.

● முதலாவதுகத்தோலிக்க உலக சுகாதாரமகாநாடு பெல்ஜியதேச பிறசெல்ஸ்தலைநகரிலே வருகிறஆடிமாதம் 27-ந்திகதிமுதல் ஆவணிமாதம் 3-ந் திகதிவரையிலே நிகழவிருக்கின்றது. இந்தமகாநாட்டிலே சுதந்திரமேற்கு ஜேர்மனியின் பிரதமரான டக்றர் கொன்றாட் அடெனோவர்அவர்கள்உட்பட அநேகசுகாதார வைத்தியநிபுணர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

● பிரான்சீஸ்குவின் சபையைச் சேர்ந்த ஓர்இத்தாலியரான முத். கார்லோ தே செஸே, ஓர்ஸ்பானிய கன்னியாஸ்திரியான முத். ஜுவக்கீனு வெத்றானு தே மாஸ் எனுமிருவரினதும் அர்ச்சியசிட்டபட்ட விசாரணைகள் சம்பந்தமாய் இம்மாதம் 9-ம், 16-ந் திகதிகளிலே பரிசுத்தபிதா மும்முறை கருதினல்மார் திருச்சங்கத்தைக் கூட்டவிருக்கிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடிமாதம்

**யேசுவின் திருஇரத்தத்தின் மாசம்**

**பொதுக்கருத்து:** தங்கள் அந்தஸ்துக்குரிய கற்புநிலைக்குப் பங்கமாக நிலவும்தப்பறைகளினால் விசுவாசிகள் பாதிக்கப்படாதிருப்பதற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** ஆபிரிக்காவின் பெரிய நகரங்களில் வாழும் ஏழைமக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளும், குடியிருப்புப் பிரச்சினைகளும் கிறீஸ்துவதர்மத்தின்படி திரும்பும்படியாக மன்ருடிக்கொள்வது,

சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு

ஆடி மாதம் 3-ந் திகதி

## கத்தோலிக்க போலாந்தும் கம்யூனிஸ்த ஆட்சியும்

போலாந்து ஓர்கத்தோலிக்க நாடு. அதிலும் வீரத்துவ வேத விசுவாசமும், வேதாபிமானமுமுடைய கத்தோலிக்கநாடுகளில் ஒன்று. இரண்டாவது உலக யுத்தத்தின்விளைவாய்ப் பலவருடகாலம் அரும்பெருந்தியாகங்கள் செய்துதான் ஈட்டிக்கொண்ட சுதந்திரத்தைஇழந்து தற்போது இரும்புத்திரைக்குப் பின்னுள்ள நாடுகளில்ஒன்ருய், கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றுவரும் நாடுகளில்ஒன்ருய் இருந்துவந்தபோதிலும் அது தனக்குள்ள வேதவிசுவாசமோ, வேதாபிமானமோகுன்ருது இன்றைக்கும் ஓர்கத்தோலிக்க நாடாகவே திகழ்ந்துவருகின்றது. அங்கே திரு.கோமுல்காஎன்றகம்யூனிஸ்ததலைவரது ஆட்சியின் இரண்டாவதுவருடம் இதுவாகும். இந்த வருடத்திலும் அங்கே திருச்சபைக்கும், அரசாங்கத்துக்குமிடையே தற்போதுஇருந்துவருகின்ற "யுத்தநிறுத்த" நிலைமை—அதாவது பிணக்கற்றநிலைமை சமீபவருங்காலத்திலும்தொடர்ந்து அவ்வாறே இருந்து வருமென்பது நன்குபுலப்படுகின்றது. ஆங்கு நவமாகநிறுவப்பெற்ற போலிஷ்நாஸ்திகர்கள், சமயநம்பிக்கை இல்லாதவர்களின் சங்கமானது தூண்டிக்கொண்டுவந்தபோதிலும் கோமுல்காவைத் தலைமையாகக்கொண்ட கம்யூனிஸ்தஆட்சியானது திருச்சபையைஎதிர்த்துப் பகிரங்கவேதகலாபனையைத் திரும்பவும் தொடக்கிநடத்தும் எண்ணமற்றதாய்ப் புத்தியாக நடந்துகொள்ளுகின்றது. மறுபக்கத்திலே போலிஷ்மேற்றிராணிமார் அநேகம் நீதியானமுறையீடுகளைச் செய்வதற்குப் பூரணஉரிமைபூண்டவர்களாய் இருந்தபோதிலும் கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றுவருகின்ற மறுநாடுகளைக்காட்டிலும் அங்கே திருச்சபையின்நிலைமை அதிகம்நன்ருய் இருப்பதைக் கண்டுணர்ந்தவர்களாய் 1956-ம்ஆண்டின் இறுதியிலே போலிஷ்அரசாங்கம் செய்தருளியஉடன்பாடுகளோடு இப்போதைக்குத் திருப்திப்பட்டுக்கொள்ளவேண்டுமென்றசிந்தனையுடையவர்களாய் இருந்துவருகின்ருர்கள்.

ஆயினும் திருச்சபைக்கும், கம்யூனிஸ்த போலிஷ்அரசாங்கத்துக்குமிடையே பிணக்குகள் இடையிடையே ஏற்பட்டுக்கொண்டுதான் வருகின்றன. அவற்றில்ஒன்று சமீபத்தில் ஏற்படக்காரணம், கம்யூனிஸ்த தலைவர்களைக் கத்தோலிக்க சேமக்காலைகளில் அடக்கஞ் செய்வதேயாகும். திருச்சபையைஎதிர்த்துப் போராடுவோர் கத்தோலிக்க சேமக்காலையிலே தங்கள்பிரேதஅடக்கத்தை எதிர்பார்க்க முடியாதென்று விசாரணைப்பங்குக்குருமார் ஆட்சேபிக்கலாயினர். கத்தோலிக்க சேமக்காலைஒன்றின்மீது நடத்தப்பட்ட கம்யூனிஸ்த படையெடுப்பைபிட்டுஎதிர்பேசிய குருமாருள்ஒருவர் சமீபத்திலே பதினெட்டுமாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்ருர். ஆனல், அத்தண்டனையை நிறைவேற்றுவது நிறுத்திவிடப்படலாயிற்று. இந்தப்பிரச்சினையைச் சரிவரத் தீர்த்துக்கொள்வதற்குப் பழைய சட்டம்ஒன்றை— அதாவது, பெரியநகரமோ அன்றேல்கிராமமோ ஒவ்வொன்றும் கத்தோலிக்கரும், அல்லது கிறீஸ்துவர்களும் அல்லாத பேர்களுக்கெனப் பொதுச்சேமக்காலைகளை அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற பழையசட்டத்தை நடைமுறைக்குக்கொண்டுவருவதே தகுந்தஉபாயமென்று போலிஷ் கத்தோலிக்கபத்திரிகைகள் ஆலோசனை கூறலாயின. ஆனல், கம்யூனிஸ்தஅரசாங்கம் அதற்குச் செவிமடுத்ததாயில்லை.

நிற்க, போலாந்திலே கர்ப்பத்தடைப்பிரசாரம் தொடர்ந்து நடைபெற்றபோதிலும் போலிஷ் மக்களிடையே பிறப்புவிகிதம் இற்றைக்கு இருவருடங்களின் முன்னரே தனது அதிகம் உயர்ந்த மட்டத்தைஅடைந்து அதுமுதல்படிப்படியாக அதிகரித்துக்கொண்டே வருகின்றது. போலாந்தின் தலைப்பட்டணமாகிய வார்ஷோநகரிலே 1956-ம்ஆண்டு 5லட்சத்து 26 ஆயிரம்குழந்தைகள் பிறந்தனவென்றும், இத்தொகை 19?2-ம் ஆண்டைக்காட்டிலும் 67 ஆயிரம் அதிகமென்றும் சமீபத்திலே புள்ளிவிபரங்கள் வெளிவந்துள்ளன. போலாந்தின்சனத்தொகை யுத்தத்துக்குமுன் இருந்ததைக்காட்டிலும் இன்று எத்தனையோ பத்துலட்சக்கணக்கானமக்களால் குறைவுடையதாய் இருந்தபோதிலும் போலிஷ்சனப்பெருக்கத்தைக் கண்டு போலிஷ்கம்யூனிஸ்தஅரசாங்கம் திகில்கொள்ளுகின்றது. அதன் கர்ப்பத்தடைஉபாயங்கள் மும்முரமாகக் கையாளப்பட்டபோதிலும் பயனளிப்பனவாயில்லை. மேலும், போலாந்திலே சனத்தொகை பெருகிவருங்காரணமாக அதிகமானகோவில்கள், அதிகமானபாடசாலைகள் வேண்டியிருக்கின்றன. ஆனல், அரசாங்கம் அவற்றிற்கு அனுமதியளிப்பதாயில்லை. உதாரணமாக, வார்ஷோதலைநகரிலே யுத்தத்துக்குமுன் இருந்ததைக்காட்டிலும் கத்தோலிக்கரின்தொகை மூன்றுலட்சம்பேரால் அதிகரித்து, அதனல் சுமார்நாற்பது புதிய கோவில்கள் வேண்டியிருக்கின்றன. யுத்தகாலத்தில்பாழடைந்த அநேகம்பழையகோவில்களைத் திரும்பக் கட்டியெழுப்புவதற்குக் கடந்தகாலங்களிலே அரசாங்கம் உதவிசெய்ததுஉண்மையே. அதனல், அவைகள் போலிஷ்கலாசாரத்தின் ஞாபகசின்னங்களாய் மிளிர்கின்றன. அங்கேயுள்ள புதியகுடியிருப்புப்பகுதிகளிலே கோவில்கள்கட்டுவதற்கு அதிகாரிகள் அனுமதியளிக்க மறுக்கிருர்களெனக் கருதினல்விசின்ஸ்கிஆண்டவர் முறையீடுசெய்து, "கோவில்கள்கட்ட உதவியளிக்கும்படியாய் நாம் அரசாங்கத்தைக் கேட்கவில்லை; அவைகளைக்கட்டுவதற்கான உரிமையையேகேட்கின்ருேம்" என்று அன்றுஇரண்டுலட்சம் போலிஷ் கத்தோலிக்கமக்கள் குழுமியிருந்தசமூகத்தில் தெரிவித்திருக்கின்ருர். ஆமாம், அவரவர்உரிமையை, சுதந்திரத்தைக் கம்யூனிஸ்தஅரசாங்கம் கொடுப்பதென்ருல் கம்யூனிஸம்ஏது?

# நாளு சங்கதிகள்

● பெண்கள் அணிந்துசெல்லும் குதிக்கால்உயர்ந்த சப்பாத்துகள் வீதியின்மேற்பகுதியைக்குத்திக் குழிவிழச்செய்து விடுகின்றனவென்று இங்கிலாந்திலே கார்ஷாரன் நகரசபைஅங்கத்தவர்கள் புகார்செய்திருக்கிருர்கள். வீதியிலே குழிவிழுந்தஇடங்களில் அடியிலிருக்கும்தார் வெளியேதெரியநேரிடுகிறதென்றும், வெய்யிலில் அது உருகிவிடுகிறதென்றும் அவர்கள் புகார் செய்துள்ளனராம்.

● அணுச்சக்திஇரகசியங்களை அமெரிக்கவாசு பிறநாடுகளுக்குக் கொடுத்துதவ அனுமதிக்கும் சட்டம் ஒன்றை அமெரிக்கசெனற்சபை நிறைவேற்றியிருக்கிறது. ஆனல், அணுஆயுதங்களை உற்பத்திசெய்வதற்குத் தேவைப்படும் உபகரணங்களைப் பிறநாடுகளுக்குவழங்குவதை இந்தச்சட்டம் தடைசெய்கிறது. இதனல் 'நேற்ருே' நாடுகளுக்கு நன்மையுண்டாகுமாம்.

● தாய்லாந்திலே (சீயம்) கலரு எனப்படும் விஷபேதிநோய் தற்போது மின்னல்வேகத்தில் பரந்துகொண்டு வருகின்றது. அதனல் ஒருமணிநேரத்தில் 500 பேருக்குக் கலருத்தடுப்பு ஊசிஏற்றக்கூடிய புதியகருவிஒன்றை அமெரிக்கஅரசாங்கம் தாய்லாந்துக்கு அனுப்பிவைத்திருக்கின்றது. அந்நாட்டிலே கலருநோய்த்தடுப்புக்கு அமெரிக்கஅரசாங்கம் செய்துவரும்உதவியின் ஒருபகுதி இதுவாகும்.

● சீனதேச ஹாங்கோமேற்றிராசனத்திலே "சீனக்கத்தோலிக்க தேசாபிமான சபை" என்ற பிரிவினைச்சபையை ஆதரிக்கமறுத்ததற்காக மூன்று கத்தோலிக்ககுருமாரும், ஓர்சாதாரண கத்தோலிக்கரும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் ஹாங்கோ மேற்றிராசன விக்கார் ஜெனறலான வண. ஒடோறிக்குஸ் விற்றிசுவாமியார் 20 வருடசிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்ருர்.

● ஹங்கேரியின் முன்னைநாள்பிரதமர் இம்றே நாகியும், அவர்தோழர்களும் மரணதண்டனைக் குள்ளானதிலிருந்து ஹங்கேரியிலே பயங்கர அடக்குமுறைஆட்சி இருந்துவருவது நிச்சயமென்று ஹங்கேரியின் மற்ருெர் முன்னைநாள்பிரதமரான பெரேன் நாகி எண்பவர் வாஷிங்ரன்நகரிலே அபிப்பிராயந்தெரிவித்திருக்கிருர். அமெரிக்காவிலபோய் அடைக்கலம்புகுந்துள்ள இவர் அங்கே ஓர்விவசாயப்பண்ணை நடத்திவருகிருர்.

● வானசாஸ்திர கண்கொண்டு கவனிக்குமிடத்துச் சோவியற் ரூஷியாவும், ஐக்கிய அமெரிக்கதேசமும் வானவெளிக்கு அனுப்பியுள்ள செயற்கைச் சந்திரன்களால்—செய்மதிகளால் யாதாமோர் பிரயோசனமுமில்லையென்று சோவியற் வானசாஸ்திர போசிரியை ஏ. மாஸிவிச் எனும்மாது வீயென்னநகர சர்வகலாசாலைக் கூட்டமொன்றிலபேசியபோது கூறியிருக்கின்ருர்.

● பசிபிக்சமுத்திர பரிசோதனைத்தளத்திலே அமெரிக்க அரசாங்கம் சென்றவெள்ளியன்று இரு அணுக்குண்டுகளை வெடிக்கவைத்துப் பரீட்சைநடத்தியதாக அமெரிக்க அணுக்கம்மிஷன் அறிவித்திருக்கிறது. முதலாவதுகுண்டு இரவு 9 மணிக்கும், இரண்டாவதுகுண்டு இரவு 12மணிக்கும் வெடித்தன. "ஹார்ட்றக்" அணுக்குண்டுப் பரீட்சைத்தொடரில் இவைகள் 8-ம், 9-ம் குண்டுகளாகும்.

● இங்கிலாந்திலே கிறெனேசைட் பட்டினத்திலுள்ள அர்ச். மாற்குவின் பங்குக்கோவிலிலே கடந்த பன்னிரு வருடங்களாக விக்காராயும், 1915-ம் ஆண்டுமுதல் ஓர்அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராயும் இருந்துவந்தவரான கனம். எல். பி. டபிள்யு. ஹெப்பெண்ஸ்ரோல்அவர்கள் அங்கிளிக்கன்சபையிலிருந்து தம்பதவியை இராசினாமாச் செய்துள்ளார். சமீபத்திலேஇவர் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொள்ளவிருக்கின்ருர்.

● சீனதேச ஷங்காய்நகரிலே சிறைவாசஞ்செய்துவந்த அமெரிக்ககத்தோலிக்க குருமார்இருவரை ஐந்துவருடசிறைவாசத்தின்பின் விடுதலைசெய்திருப்பதாகச் சீனஅரசாங்கம் தெரிவித்திருக்கின்றது வண. யோசெவ் மைக்கோர்மைக், வண. சிறில் வாய்க்னர் என்பவர்களே அவ்விருகுருவர்களுமாவர். இவர்கள் முறையே வேவுபார்த்ததாகவும், பொருளாதாரசட்டங்களை மீறியதாகவும் குற்றஞ்சாட்டித்தான் தண்டனைவிதிக்கப்பட்டிருந்தார்கள்.

● அமெரிக்க டெற்ருேயிட்நகரிலே அலுமீனியங்கொண்டு மூன்று வி—8 மோட்டர் எஞ்ஜின்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பரிசோதனைசெய்து வெற்றிகண்டிருப்பதாக ஜெனறல் மோட்டர்ஸ் கார்ப்பறேஷன் எஞ்ஜினியர்கள் அறிவித்திருக்கிருர்கள். கையால்செய்யப்பட்ட இந்த அலுமீனிய எஞ்ஜின்கள் இவைபோலும் பருமனும, விசைத்திறனுமுள்ள எஞ்ஜின்களின்நிறையில் நூற்றுக்கு 30 விகிதம் குறைந்தனவாகும்.

● சோவியற் ரூஷியாவிலே எல்லோரும் அஞ்சிக்கலங்கும் இரகசியப் பொலிஸ்படைகள் கடந்தசிலமாதங்களாகப் பலப்படுத்தப்பட்டுவருவதாக லண்டனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. சோவியற் இரகசியப்படைத்தலைவர் அலெக்சாண்டிரே விக்செரோல் சென்றசிலதினங்களாகப் பெரிதும்முக்கியத்துவம் பெற்றுவருவதாகவும், சோவியற்முகாமில் பாதுகாப்பு ஏற்பாடுகள்பலப்படுத்தப்பட்டு வருகின்றனஎன்பதற்கு இவைகள் ஆதாரமாயிருக்கக் காணப்படுவதாகவும் செய்திபரந்திருக்கிறது.

● ஹங்கேரிய முன்னைநாள்பிரதமர் இம்றே நாகியும், அவர்தோழர்களும் தூக்கிலிடப்பட்டசெய்தி வெளியானதுமுதல் பிறசெல்ஸ்நகரில் நடந்துவரும் உலகபொருட்காட்சியிலுள்ள ஹங்கேரிய காட்சிமண்டபத்துக்கு யாருமே செல்வதில்லையென்றும், எவரும்சொல்லாமலே மக்கள்அவ்விதம்செய்திருக்கிருர்களென்றும் அங்கிருந்து செய்திகிடைத்திருக்கிறது. அதற்குமுன் பதினையிரமுதல் முப்பதினையிரம்பேர்வரை ஹங்கேரியகாட்சிமண்டபத்தைத் தரிசித்ததுண்டாம். தற்போது இந்த மண்டபத்துக்குப் பொலிஸ்காவல்வைக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லூர்துபதிக்கும், ரோமாபுரிக்கும் இலங்கைத் தேசீய திருயாத்திரை

லூர்துபதி நூற்றாண்டுவிழா நடந்தேறும் இவ்வருடத்திலே அத்திருப்பதிக்கு இலங்கைத்தேசீய திருயாத்திரை சென்ற 28-ந்திகதி சனிவாரம் ஆரம்பமாயிற்று. இந்தயாத்திரையில் சேர்ந்துள்ள 73 யாத்திரிகர்களும் அன்றுதினம் கொழும்பிலிருந்து எஸ். எஸ். ஸ்ருத்நேவர்எனும்கப்பலில் பிரயாணமானார்கள். கொழும்பு அதிமேற்றிராணியார் இந்த யாத்திரையைத் தலைமைவகித்து நடத்திச்செல்லவிருந்தார். ஆனால், தமது அதிகாரபதவிக்குரிய அவசியகருமங்களையிட்டுத் தாமதிக்கவேண்டியவரானார். ஆயினும், கொழும்புத் துறைமுகப்பாலத்திலே சமுகமாயிருந்து யாத்திரிகர்களை ஆசீர்வதித்துப் பயணமனுப்பிவைத்தார். இந்தயாத்திரிகர்கள் நிகழும் ஆடிமாதம் 17-ந்திகதியன்று லூர்துபதிபோய்ச் சேர்வார்கள். அதன்மேல் ஆவணிமாதம் 1-ந்திகதியன்று ரோமாபுரியை அடைவார்கள். அதி வண. நீறஸ் பெர்னாண்டோ சுவாமியார் அவர்களை வழிநடத்திச்செல்லுகின்றார்.

---

● லூர்துபதி நூற்றாண்டுவிழா சென்றமாசிமாதம் 2-ந்திகதியன்று ஆரம்பமானதுமுதல் இதுவரை 668டக்றர்மார் அத்திருசேத்திரத்தைத் தரிசித்து, யாத்திரைகளின் கருமசாலைப் பதிவுபுத்தகத்திலே கையொப்பம்வைத்திருக்கிறார்கள். இவர்களில் அரைவாசிப்பேர் பிரான்சுக்கு வெளியேயுள்ள பிறநாடுகளிலிருந்து சென்றவர்கள்.

● கண்டம்விட்டுக் கண்டம்பாயும் பறக்கும்குண்டொன்றை அமெரிக்க விமானப்படை சென்றவியாழக்கிழமை அனுப்பியது. இந்தக்குண்டு 5,000 மைலுக்கப்பால் அத்திலாந்திக்சமுத்திரத்திலே அசென்ஷன் தீவுக்கருகிலுள்ள ஓர்குறிப்பிட்டஇடத்துக்கு அனுப்பப்படலாயிற்று. கண்டம்விட்டுக் கண்டம்போகும்தூரத்தை வெற்றிகரமாகக் கடந்த பறக்குங்குண்டு இதுவாகும்.

● முதிர்ந்தஎலும்புகளை ஒருசில நிமிஷநேரத்துள் இணைத்துவிடக்கூடிய கெட்டியான "பிளாஸ்ரிக்" பசை ஒன்று கண்டுபிடித்துச் செய்யப்பட்டிருப்பதாக ஐக்கிய அமெரிக்கதேச சிஞ்சினாத்திநகரிலிருந்து சென்ற 25-ந்திகதி செய்திகிடைத்திருக்கிறது.

● "எக்ஸ் புளோறர்" என்ற அமெரிக்காவின் மூன்றாவது செயற்கைச்சந்திரன் சென்ற 27-ந்திகதியன்று வானவெளிக்குத்திரும்பி எரிந்துபோயிருக்குமென்று அமெரிக்கஇராணுவ உத்தியோகஸ்தர்கள் கூறியிருக்கிறார்கள். அமெரிக்காவின் இந்தச்செயற்கைச் சந்திரன் எரிந்தபின்னரும் மேலும் மூன்று செயற்கைச்சந்திரன்கள் வானவெளியில் சுற்றிக்கொண்டிருக்கின்றன.

● இத்தாலியைச்சேர்ந்த அண்கோனாநகரிலே அழிவுறா வண்ணம் மருந்துபோட்டுப் பாதுகாத்துவைக்கப்பட்டுள்ளதும், நெப்போலியன் சக்கிரவர்த்தியுடையதுமான குதிரையொன்றின்உடல் சமீபத்திலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1797–ம்ஆண்டு மாசிமாதம் நெப்போலியன் சக்கிரவர்த்தி அண்கோனாவுள்பிரவேசித்துக் குதிரையை மாற்றிக்கொண்டார். அவர்அங்கு விட்டுச்சென்ற குதிரையின்உடலே இதுவாகும்.

● உலகசனத்தொகை அதிவேகமாக அதிகரித்துவருகிறது; இன்னும் 600 வருடங்களில் மக்கள்வாழ்வதற்குப் பூமியில் போதியநிலமில்லாத நிலைமைதானும் ஏற்பட்டுவிடுமென்று ஐக்கியநாடுகளின் அறிக்கையொன்று கூறியிருக்கின்றது. தற்போது 273 கோடியே 70 லட்சம் மக்கள் பூமியில் வசிக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் இறுதியிலே இத்தொகை 600 அல்லது 700 கோடியாக அதிகரித்துவிடுமாம்.

## முதல் வெள்ளி முதற் சனி

—*—

**நாளை (4-7-58) வெள்ளிக்கிழமை முதல்வெள்ளி–மறுநாள் முதற்சனி**

தொடர்பாக ஒன்பதுமாதங்களிலே முதல்வெள்ளிக்கிழமைதோறும் திவ்வியநன்மை வாங்குகிறவர்களுக்குப் பாக்கியமான மரணமடையும்வரப்பிரசாதத்தை அருள்வதாக நமது திவ்வியகர்த்தர் வாக்களித்திருக்கிறார்.

தொடர்பாக ஐந்துமாதங்களிலே முதற்சனிக்கிழமைதோறும் திவ்வியநன்மைவாங்கித்தேவஇரகசியங்களைத்தியானித்துக்கொண்டு 15 நிமிஷநேரம் செபமாலை செபிக்கிறவர்களுக்கும் அதேவாக்குத்தத்தத்தைப் பரிசுத்த தேவதாயார் அளித்திருக்கின்றார்.

## தூய வெண்ணுடை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே ஓர்ஐயப்பாடு தோன்றலாம். நாம் மாதாவை அளவுக்குமீறித்தூக்கி மகனுக்குமேலே வைக்கிறோமா? மகனைத்தூக்கிக் கீழே போடுகிறோமா? என்பதேஅது! இதைமறுக்க ஓர் உதாரணநிகழ்ச்சியை எடுத்துக்கொள்வோம். கானாவூர்க் கலியாணத்தில் ஆறுகுடம்நீரை இரசமாக மாற்றியருளினாரே ஆண்டவர். அவர் ஏன் வெறும்குடத்தை இரசமாக்கி நிரப்பவில்லை? முடியாதா? தண்ணீர் எதற்கு? ஒன்றின்மூலம் தமதுசக்தியை முதலில்இறக்கினார். அதேபோல் நாம் மாதாவின் வழியாக மகனைத் தொழுகிறோம். இன்னும் கொஞ்சம் அன்புபெருகட்டும் என்பதற்காக! மாதா கோயிலின் வெளியில் நின்றே நம்மை வரவேற்கிறாள். "உள்ளே என்மகன் இருக்கிறான்; நீ தூயஇருதயத்துடன் போ!" என்று நம்மைத் தூய்மைப்படுத்தும் ஒரு விளக்கொளியாக — எந்நேரமும் செபதபமூலம் உலகபாவங்களைஎல்லாம்போக்க உதவுகிறாள். அதனால், இன்றும் வாடாமலராக — ரோசாமலராக விளங்குகிறாள். உலகம்உள்ளளவும் அவளைப் பாக்கியவதிஎன்றே அழைக்கும். அந்தப்பாக்கியவதியின் ஆசீர் என்றும் நமதுதிருச்சபைக்கு உண்டு. அதன் மக்களாக நாம்வாழ்ந்து, நம்து அமலோற்பவியின் ஆசீருக்குரிய அன்புமைந்தர்களாக இருப்போம்!

— கத்தோலிக்க சேவை

## புதியபாடசாலைத் திறப்புவிழா

நீர்கொழும்பைச்சேர்ந்த டங்கோன் எனுமிடத்திலே சென்ற 29-ந்திகதியன்று புதியகத்தோலிக்க பாடசாலை ஒன்று திறந்துவைக்கப்படலாயிற்று. கொழும்பு அதிமேற்றிராணியார் அதனைத் திறந்துவைத்துப் பேசியபோது: கத்தோலிக்கமக்களின் வியர்வையிலும், இரத்தத்திலுமே கத்தோலிக்க கல்விஸ்தாபனங்கள் நிறுவப்படுகின்றன; பிள்ளைகளுக்குச் சமயகல்வி அளித்துவந்தால் குற்றங்கள், வேற்றுமைகள், அமைதியின்மைகள்போன்ற சமூககஷ்டங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்; பிள்ளைகளுக்குக் கல்வியூட்டுவதில் ஒழுக்கப்பயிற்சிக்கே முதலிடம் அளிக்கவேண்டுமெனக் கூறிநின்றார். பாடசாலைத்திறப்புவிழாவிற்குத் தலைமைவகித்த கல்விமந்திரி திரு டபிள்யு. தஹநாயகா பேசுகையில்: இந்நாட்டிலுள்ள பல்வேறுசமய, வகுப்புமக்களிடையே சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும வளர்ப்பதற்குப் பிரதமரும், மந்திரிசபையினரும், அ...

## NOTICE

Sealed tenders are invited for spreading and consolidating metal on Municipal Road.

Closing date—16th July, 1958.

For further particulars, communicate with the Works Engineer, Municipal Council, Jaffna.

**A. V. Chinniah,**
Municipal Commissioner.

Municipal Office,
Jaffna, 16th June, 1958.

---

❋ ரோமாபுரியிலே பாப்பானவரால் அபிஷேகஞ்செய்யப்பெற்றஒரேயொரு ஆங்கிலேயஅரசர் யார்?

பெரிய அல்பிறெட் மன்னரே.

❋ அசிஸிநகர் அர்ச். பிரான்சீஸ் என்னென்னசின்னங்களால் அறியப்படுகின்றார்?

ஓநாய், பட்சிகள், மீன், ஐந்துகாயங்கள் எனும்சின்னங்களால் அறியப்படுகின்றார்.

❋ லண்டன்மாநகரிலுள்ள வீதிகளைச் சுத்தஞ்செய்வதிலே வருடம் ஒன்றுக்கு ஒருமைலுக்கு என்ன செலவுஏற்படுகிறது?

ஏறக்குறைய 3,000 பவுண் செலவேற்படுகிறது.

---

சாங்க பாராளுமன்றகட்சியினரும் இயன்றமுயற்சி எடுப்பார்கள்; இந்நாட்டிலுள்ள சமயஸ்தாபனபாடசாலைகளை ஒழித்துக்கட்ட நான்விரும்பவில்லை; இப்பாடசாலைகள் வருங்காலத்துக்கு எவ்வளவோசேவைகள் செய்கின்றனஎனக் கூறலாயினர்.

### பஸ்பிரயாண சலார்விகிதம்


இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்பிரயாண சலார்விகிதத்தைத் திருத்தியமைத்திருக்கிறது. புதிய சலார்விகிதப்படி, சமபூமிப் பிரதேசங்களில் மைலுக்கு நான்குசதமும், மலைநாட்டுப்பகுதிகளில் மைலுக்கு ஐந்து சதமுமாகும். தற்போதுள்ள சலார்விகிதம் மைலுக்கு இரண்டுசதமுதல் பத்துச்சதம்வரை பலதரப்பட்டது. புதியவிகிதப்படி மக்களில் நூற்றுக்கு 60 விகிதமானோர் தற்போது தாங்கள் கொடுக்கும் பணத்திலும் குறைவாகவும், 15 விகிதமானோர் சற்றுக்கூடுதலாகவும் கொடுக்கவேண்டிவரும். 25 விகிதமானோர் தற்போதுகொடுக்கும் சலார்த்தொகையில் மாற்றம்எதுவும் இருக்கமாட்டாது. கொழும்பும், அதன்சுற்றுப்புறங்களும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாத்தறை, காலி, வடமத்தியமாகாணம், சபபிரகாமமாகாணத்தின் ஒருபகுதி, ஊவா, குருநாகல்என்பனவும மைலுக்கு 4 சதம் கொடுக்கவேண்டுமென்று போக்குவரத்துச்சபை உத்தேசித்துள்ளது. மலைநாட்டுப்பகுதிகளில் மைலுக்கு 5சதவீதம் கொடுபடவேண்டியபகுதிகள் கண்டி, மாத்தளை, குருநாகல், ஹற்றன், வதுளைப்பிரதேசம் ஆதியனவாகும்.

### விருந்தினர்தொகைக் கட்டுப்பாடு

அரிசி, மா, சீனிமுதலாம் பதின்மூன்று உணவுப்பொருட்கள் சம்பந்தமாய் எந்தஒருசமூககொண்டாட்டத்திலும் விருந்தினரின்தொகை ஐம்பது பேருக்குமேல் அதிகரிக்கப்படாதென்று கட்டுப்படுத்திச் சென்றவைகாசிமாதம் 30-ந்திகதியன்று உணவுமந்திரி விசேஷசெசற் மூலம் விடுத்த உத்தரவு தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது.

### காலநிலை

சோழகக்காற்று புசலைப்போன்று இரவுபகலாக வீசிக்கொண்டிருக்கிறது. மழைக்கோலம் இடையிடையே காணப்படினும் மழையில்லை. காற்று உரமாகவீசிவருவதும், மப்புமந்தாரமும்காரணமாக வெப்பம்சாந்தியாகின்றது.



## 8-ம்வருட மரணஞாபகம்

பிறப்பு: 25—12—27 இறப்பு: 5—7—50

எனது அருமைக்குமாரர் திரு. இம்மனுவல் துரைரத்தினம் செல்வத்துரை அவர்கள்மறைந்து இன்றோடு (5-7-58) எட்டுஆண்டுகள் நிறைவாகின்றன.

பாவி பயந்த மணியெட் டிலேயோவெம்
ஆவித் துரைய னணைந்திட்டால்—பூவில்
மறவோ ரறவோருற் றுரைக் கெஞ்சிற்றேம்
துறவா துதவு மவர்க்கு.

இதனைக்காணும் சகலரையும் இவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய்க்கேட்டுக்கொள்ளுகிறோம்.

"நித்தியஇளைப்பாற்றியை அவருக்குக் கொடுத்தருளுஞ்சுவாமி; சமாதானத்தில் இளைப்பாறுவாராக"

இவர்பிரிவால் துயருறும்

தாய்: ஸ்ரீமதி மு. செல்வத்துரை.
பாரியார்: ஸ்ரீமதி செ. துரைரத்தினம்

சகோதரர்கள்: இராசரத்தினம், நாகரத்தினம், தம்பிரத்தினம், சங். சிஸ்றர் மேரி லூமினா (நேசரத்தினம்), தங்கரத்தினம், யோகரத்தினம், அரியரத்தினம், சண்முகரத்தினம்.

---

✝

## முதல் வருட மரண ஞாபகம்

**"என் சீவியம் மின்னலைப்போல் தோன்றி மறைந்தது. என்னைச் சீவியத்தில் நேசித்தவர்கள், மரணத்திலும் மறவாதீர்கள்."**

மண்ணினின்று மறைந்தும், எம்எண்ணம் விட்டகலாத நேசப்பத்தாவும், அன்புத் தந்தையுமான **திரு. எஸ். எஸ். செல்லத்துரை** (வயது 42) அவர்கள் (செல்வவாசம் மன்னார்) 7-7-57-இல் கர்த்தர் திருப்பாதம் சேர்ந்த முதல்வருடம.

7-7-58-த் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு மன்னார், அர்ச். செபஸ்தியார் தேவாலயத்தில் ஒர்துக்கப்பாடற்பூசை நடந்தேறும். இதைக்காணும் யாவரும் அன்னாரின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அருமைப் பத்தாவைஇழந்த
மனைவி: ஏ. எஸ். றெபெக்கா

அன்புத் தந்தையைஇழந்த

மக்கள்: ஏ. எஸ். தவரெட்டினம், செல்வரெட்டினம், அரியரெட்டினம், துரைரெட்டினம், ரெட்டினமலர், ஜெரூட் பாலரெட்டினம்.

ஆசிரியர் சூசைப்பிள்ளை,
செல்வவாசம், மன்னார்.

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்ஸ் பிலோமினு

[ முன் தொடர்ச்சி ]

சீமாட்டி —பீற்றர் ! இத்தனை நாள் நீ தேடி அலைந்தும் கண்டு கொள்ளாத நேர்ஸ் பிலோமினுவை இன்று நான் கண்டு பிடித்துவிட்டேன்.

பீற்றர் —(ஆச்சரியத்துடன்) கண்டு பிடித்துவிட்டீர்களா ? மெய்தானு அம்மா ?

சீமா—ஆம் மெய்தான், நான் கண்டுபிடித்துவிட்டேன்.

பீற்—எப்படிக் கண்டுபிடித்தீர்கள் ?

சீமா—இன்றுகாலை வீட்டிலிருந்து கோவிலுக்குப் புறப்படுயபோது எனது செபமாலையை எங்கேயோ மறதியாக வைத்துவிட்டு அதைத்தேடியலைந்தேன் அல்லவா ?

பீற்—அதற்குப் பதிலாகத்தானே என்னிடமிருந்த அந்தச்செபமாலையைத் தங்களிடம் கொடுத்தேன்.

சீமா—ஆம், அந்தச் செபமாலையைச் சற்றுமுன் நான்கோவிலிலே எனதுகைப்பையிலிருந்து வெளியே எடுத்தபோது அங்கு செபஞ்சொல்லிக் கொண்டிருந்து தற்செயலாக அதைப் பார்த்த இப்பெண்மணி நான்கோவிலை விட்டு வெளியேவந்ததும் என்னைக் கண்டு இச்செபமாலையைப்பற்றி என்னிடம் வினவினு. அப்போதுநான் உள்ளதைஉள்ளபடியே ஒன்றும் ஒளியாது எடுத்துச்சொன்னேன். அப்போது இந்தஅருமையான கருமணிச் செபமாலையையும், இதிலே வெள்ளிக் குருசு இணைக்கப்பெற்ற விதத்தையும் பற்றிய விபரங்களையெல்லாம் இவதான் எனக்குவிரிவாக எடுத்துக் கூறினு. மகனே ! அன்று நீ விபத்துக்குள்ளாய் ஆஸ்பத்திரியில் மிகுந்த வேதனையுற்று ஆபத்தான நிலைமையில் கிடந்தபோது சம்மனசுபோன்று ஓர் பெண்மணி வலியஉன்னைத் தேடிவந்து உன்னுடன் அந்தாங்கமாகச் சம்பாஷித்து, உன்னைமனஸ்தாபப்படச் செய்து, உன்னைமனந்திருப்பித் தனது செபமாலையையும் உனதுகையில் வைத்துப்போனதாக என்னிடம் ஒருமுறைக்குப் பலமுறை சொல்லிச்சொல்லி ஓன்றுறினுயில்லையே. நீ பலமுறை தேடியலைந்தும் கண்டுகொள்ளாமற்போன அப்பெண்மணியைக் கடவுளாகப் பார்த்து இன்றுஎமதுகண்முன் வலியக்கொண்டுவந்து காட்டியிருக்கிருர். மகனே ! நீகாண ஆசித்துத் தேடிய அந்தமாது —உனக்கு அந்த மகாப் பேருதவியைச்செய்தருளிய அந்த மாது— இந்தநல்லவெள்ளிக்குருசுச் செபமாலைக்குரிய அந்த நல்லநேர்ஸ் பிலோமினு இவதான் கண்டுகொள் என்று சீமாட்டி உருக்கமாகக் கூறினுள்.

இதைக்கேட்டதே நேர்ஸ்பிலோமினு நாணத்தினுல் மயிர்கூச்செறியத் தலை குனிந்தாள். அப்போதுபீற்றர் பெரிதும் ஆச்சரியவசத்தனுய்த் தனக்குண்டான மனவெழுச்சியைத்தாங்கவாற்ருது சட்டென்று சிலஅடிகள்முன் வைத்துச்சென்று நேர்ஸ்பிலோமினு வின்கரத்தைப் பற்றிப்பிடித்து நன்றியறிதல்பெருக அதனை முத்தமிட்டு: "என்பிரிய நேர்ஸ்! தாங்கள் அன்று செய்த பேருபகாரத்தை எனது ஆருயிர்பிரிகிறவரையில் மறக்கவேமாட்டேன் ; எனது நன்றியைத் தெரிவிக்குமாறு ஆ! இத்தனைநாளும் தங்களைத் தேடியலைந்தேனே ; இன்று கடவுள் தான் புதுமையாக எங்களைச்சந்திக்கச் செய்தருளினுர்போல் இருக்கிறது; எத்தனையோ வருடகாலமாய்க் கோவில்முகம்காணுது, வேதானுசாரமில்லாது ஊதாரியாய்த்திரிந்து தாறுமாருய்நடந்து என்பெற்ருேருக்குத் தீராக் கவலையையும், பேரவமானத்தையும் உண்டுபண்ணிவந்தஎன்னை அந்தவேளை அற்புதமாக மனந்திருப்பி உயிர்பிழைக்கவைத்த மாதரசே! அன்றுதாங்கள் செய்யாமற்செய்த அந்தப்பேருதவிக்கு இந்தவையகத்தில் யாதுகைம்மாறு யான் செய்யப்போகிறேனே ?" என்று சொல்லி ஆனந்தக்கண்ணீர் சொரிந்து நின்ருன். அப்போது அவன்தாயாரான சீமாட்டியின் கண்களும்கலங்க அவற்றினின்றும் சிலதுளிகள் அவள் கன்னத்தில் உருண்டோடின.

உள்ளமேகசிந்து உருகும்படியாகப் பீற்றர் இவ்விதம்கூறியதும் சிறிதுவேளைமூவரும் சித்திரப்பதுமைகளைப் போல் அசைவற்றுநின்ருர்கள். பீற்றர் அதன்மேல் பின்னரும்தொடர்ந்து சொல்லுவான். "நேர்ஸ்! என்னை நல்வழிப்படுத்தியது இந்தச்செபமாலையே ; எங்கள்இருவரையும் இன்று சந்திக்கச்செய்ததும் இந்தவெள்ளிக் குருசுச் செபமாலையே ; இன்றுகாலை எனது தாயார் தனது செபமாலையை மறதியாக எங்கேயோ வையாதிருந்தால்—இந்தச்செபமாலையை அம்மாவுக்கு நான் இரவலாகக் கொடாதிருந்தால்—ஒருவரைஒருவர் நாங்கள்ஒருபோதுமே சந்தித்திருக்கமாட்டோம் ; இப்போது நாங்கள் சந்தித்தபடியால், தங்கள் செபமாலையைத் திரும்பவும் தங்களிடம் நான் ஒப்படைத்துவிட வேண்டும் ; அம்மா! அதனை அவவிடம் கொடுத்துவிடுங்கள்."

"இல்லை, இல்லை, தாங்கள்தான் அதை வைத்திருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்."

"உள்ளபடிதான் விரும்புகின்றீர்களா ? என்ன அழகான ஒருசெபமாலை... ; இப்படியான ஒருசெபமாலை கிடைப்பது அருமை; அதனுல் உங்கள் அருமையான இந்தச்செபமாலையை இனிமேலும்நான் வைத்திருக்கப்படாதென்றுதான் எண்ணுகின்றேன்."

"அதைப்பற்றிக் காரியமில்லை; அதை நீங்களே வைத்திருக்க வேண்டுமென்று நான் உள்ளபடியே விரும்புகின்றேன்."

"அப்போநல்லது, நானே அதை வைத்துக்கொள்ளுகிறேன் ; ஆனுல், ஆஸ்பத்திரியிலே அன்றுநான் செவிகுளிரக்கேட்ட தங்கள் இனிய குரற்தொனியை எனதுஉயிருள்ளவரையும் ஒருநாளுமே மறக்கமாட்டேன் ; அவர்கள் நினைத்திருந்தபடி நான் அறிவற்றிருக்கவில்லை ; எனதுகாதில் இந்த வெள்ளிக்குருசுச்செபமாலையைத் தாங்கள் வைத்ததை நான் உணர்ந்தேன் நன்ருய் ; அவர்கள் எனது ஊனக்கண்களை அப்போது இறுக மூடிக்கட்டிவிட்டிருக்க, தாங்களோ நெடுங்காலமாக அந்தகாரத்தால்இறுக மூடிக்கட்டப்பட்டிருந்த எனது ஞானக்கண்ணைத் திறந்துவிட்டீர்கள் ; அதனுல் தங்களுக்கு எனதுமனமார்ந்த நமஸ்காரம்." இதைக்கேட்ட நேர்ஸ் பிலோமினு மீண்டுமோர்தரம் நாணத்தினுல் தலைகுனிந்து ஓர்தரம்நிலத்தை உற்றுநோக்கிவிட்டு ஏதோ பதகளிப்பாள்போல், "நேரமாகிவிட்டது ; நான் கந்தோருக்குப் போகவேண்டும்" என்று பரபரப்புடன் கூறினுள்.

பீற்—கந்தோருக்கா! ஏன் இப்போது தாங்கள் ஓர்நேர்ஸ் இல்லையா ?

பிலோ—இல்லை. அதுஎனக்குச சரிவராதபடியால் அதைக்கைவிட்டு, சமீபமாகவுள்ள ஓர்கந்தோரில் இப்போது வேலை பார்த்துவருகிறேன். இப்போது எனது மத்தியானப்போசன ஓய்வுநேரமாகையால் வழமைபோலச் சிறிது நேரம் செபஞ்செய்துவிட்டுப் போக இந்தக்கோவிலுக்கு வந்தேன்.

சீமா—அப்போ உன்னைச் சுணக்கப்படாதுதான் ; ஆனுல், தயவுசெய்து உனது விலாசத்தைத் தந்தால்நல்லது ; ஒருநாளைக்கு உன்னை எமதுமனைக்கு அழைத்துச்சென்று உபசரித்து எமது நன்றியைப்பாராட்ட ஆசிக்கின்ருேம்.

பிலோ—அம்மா! ஓர்கத்தோலிக்க நேர்ஸ் தனதுகடமையையே செய்திருக்கும்போது, அத்துணைபெரும் பிர

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# யாசகியாக வந்த சதாசகாய மாதா

—: M. P. :—

ஓர்காலம் ருேமைநகரின் சுற்றுடலிலுள்ள சிறுபட்டினம் ஒன்றிலே ஐந்து பிள்ளைகளுக்குத்தாயான ஓர்விதவை இருந்தாள். அவள்வசித்திருந்த சிறு குடிசைதவிர அவளுக்குச்சொந்தமாய் இந்தவையகத்தில் யாதொன்றும் இருக்கவில்லை. அத்தகைய பெரும் ஏழையாய் அவள் இருந்தபோதிலும் யாசகஞ்செய்து சீவனம்பண்ணக் கனவில்முதலாய் அவள்கருதவில்லை. அல்லும்பகலும் கையடித்துக் கைத்தொழில்செய்து தன்னையும், தனது ஐந்து பிள்ளைகளையும் அவள் சம்ரட்சணை செய்துவந்தாள். பின்னல்வேலையிலே அவளைப்போலக் கெட்டிக்காரி அந்தப் பட்டினத்தில் இல்லையெனலாம். அவள் மிகநேர்த்தியாகப்பின்னிய சிறு தொப்பிகளை அவளுடையமகள் கத்தரீன் சனிக்கிழமைதோறும் வீதிகளிலேகூவி விற்றுக்கொண்டு வருவாள். "பின்னல் தொப்பிகள் வாங்கலையோ, பின்னல் தொப்பிகள்" என்று கூவும் அந்தச்சிறுமியின் குரலைக் கேட்டதே பெண்மணிகள்பலரும் சன்னல்பக்கம் ஓடிவந்து, தொப்பிகளை விலைகொடுத்து வாங்குவார்கள்.

அழகான இந்தத் தொப்பிகளைச் செய்ய அந்தஏழைவிதவை இரவுபகலாக உழைக்கவேண்டியிருந்தது. அவளுடையமகள் கத்தரீனுக்கு இருகைகளிலும் விரல்கள்வளைந்து விகாரப்பட்டிருந்தமையால் தொப்பிகள் பின்னும் வேலையிலே அவள் தன்தாய்க்கு உதவி செய்யக்கூடியவளாய் இருக்கவில்லை. மற்றப் பிள்ளைகளோ சிறுபிள்ளைகளாய் இருந்தபடியால் அவர்களாலும் தாய்க்கு உதவிசெய்ய இயலவில்லை.

ஆயினும், ஏழையான அந்தவிதவை தேவதாய்மட்டிலே மிகுந்த பக்தியுள்ளவளாய்த் தன்குடிசையில் பூச்சியமாக வைத்திருந்த தேவமாதா சுரூபத்தின்முன்பாக எப்போதும் வெள்ளிக்கிழமை சாயந்தரமுதல் சனிக்கிழமை இரவுவரை மெழுகுவர்த்தி ஏற்றிவைப்பாள். சதாசகாயமாதாவின் திருநாளாகிய அன்று வெள்ளிக்கிழமையும் வழக்கம்போல அவள் சுரூபத்தின்முன்பாக மெழுகுவர்த்தி ஏற்றிவிட்டுச் சன்னல்பக்கம்போய் உட்கார்ந்து தொப்பிகள் பின்னிக்கொண்டிருந்தாள். அப்போது கத்தரீன் சற்றுஎட்டத்தில் சாப்பாடுதயாரித்துக் கொண்டிருந்தாள். அந்தவேளை சன்னல்பக்கமாக ஒருநிழல் தோன்றியது. மறுகணம் யாரோ கதவில்தட்டுஞ் சப்தம் கேட்டது. கத்தரீன் ஓடிச் சென்று கதவைத்திறந்தாள்.

பலவீனமான ஓர் அந்நியஸ்திரீ அங்கு தோன்றி: "அம்மாமாரே! சர்வேசுரனின் நேசத்தை முன்னிட்டு எனக்குக் கொஞ்சம் தருமம் கொடுங்கள்" என்று பணிவாக மன்ருடினுள்.

அப்போது நற்குணமுள்ள அந்த விதவை: "எங்களிடம் ஓர் செம்புக் காசுமுதலாய் இல்லை ; நாங்கள் மிகவும் ஏழைகள் ; கொஞ்சம் ரெட்டியும், ஒருகோப்பை சூப்புந்தவிர வேருென்றும் எங்களால் தரமுடியாது" என்ருள்.

இதைக்கேட்ட பிச்சைக்காரி: "அம்மா! அவைகள்தான் எனக்கு வேண்டும் ; அவற்றைத்தான் நான் ஆசிக்கிறேன் ; இன்று காலைமுதல் கொஞ்சம் ரெட்டிமுதலாய் என் வாயில் பட்டதில்லை" என்று அங்கலாய்ப்புடன் கூறினுள்.

அவ்விதம்கூறியதும் விதவை அந்த யாசகியை உள்ளேவந்துஉட்காரும்படி செய்து, ஓர்கோப்பையிலே சூப்பு வார்த்துக் கொண்டுவரும்படி கத்தரீனுக்குச் சொல்ல, அவள் தாயைப் பார்த்து: "அம்மா! இன்றுகாலை நான் ஒருகோப்பையைக் கைதவறிப் போட்டுடைத்துவிட்டேன் ; இப்போது ஆறுகோப்பைகளே இருக்கின்றன" என்று விசனத்துடன்கூறினுள். தாய் அதைக்கேட்டு: "பறுவாயில்லை ; நீ என்கோப்பையில் குடிக்கலாம் ; கடவுள்அனுப்பிய அதிதிக்கு ஒரு கோப்பை அகத்தியம் வை" என்று வசனித்தாள்.

அப்போது யாசகியாகவந்த அந்த ஸ்திரி தான் மேலேபோட்டிருந்த நீண்ட கறுப்புமுக்காட்டைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டாள். அதன் மடிப்புகள் அவள்சிரசிலிருந்து பாதங்கள்வரை உடம்பைமூடிக்கொண்டு மிக அழகாக விரிந்து படிந்திருந்தன. அந்தஸ்திரியின் உள்சட்டை அதிகந் தூய்மையான நீலவஸ்திரங்கொண்டு தைக்கப்பட்டிருந்தது. அவளைச் சிறிதுவேளை கூர்ந்துபார்த்துக்கொண்டிருந்த ஜூலியானு என்றசிறுமி கத்தரீனண்டை ஓடிச்சென்று: "அக்கா! இந்தப் பிச்சைக்காரியைப் பார்த்தால் சதாசகாயமாதா படத்திலுள்ள மாதாவைப்போல இல்லையா?" என்று மெதுவாக அவள்காதுக்குள் சொன்னுள்.

அதற்குக் கத்தரீன்: "என்ன சொல்லுகிருய்? இந்தப் பிச்சைக்காரி படத்திலுள்ள சதாசகாய மாதாவைப் போல் இருக்கிருளா? மற்றவர்களே அவளுக்குச் சகாயஞ்செய்ய வேண்டியிருக்கும்போது—அவளே வீடுவீடாகச்சென்று யாசகஞ் செய்துகொண்டிருக்கும்போது சதாசகாய மாதாவாய் இருக்கக்கூடுமா ?" என்று கேட்டாள்.

இதைக்கேட்டதும் பீற்றர் என்ற அவளுடைய மற்ருெருதம்பி: "என்ன அக்கா சொல்லுகிருய்? அந்தமனுஷி வீடுவீடாகப் பிச்சையெடுத்து வரவில்லை ; பட்டினத்திலிருந்து வருகிறவள் போல் சந்தியிலிருந்துதிரும்பிநேரேஎங்கள்வீட்டுக்கு வரக்கண்டேன் ; பாரிய பணக்காரரும், பார்வைக்கு நல்லமனைகளில் வசிக்கிறவர்களுமான எங்கள் அயலார்வீடுகளில் ஒன்றிலேனும் நுழையாது நேரே எங்கள்வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினுள்" என்று அழுத்தமாகக் கூறினுன்.

அப்போதுகத்தரீன்: "இது உனக்கு எப்படித்தெரியும் தம்பி?" என்று மெதுவாக அவனைக்கேட்டாள். "நான் எல்லாம் சன்னலிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தேன்" என்ருன் பீற்றர்.

இவ்விதம் அவர்கள் பேசியதைக் கேட்டதாய்: "சற்றுப் பேசாமலிருங்கள் ; நமதுவிருந்தாளி போசனத்தின் முன் செய்யவேண்டிய செபஞ்செய்து தேவஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுகிருளோ பார்ப்போம்" என்று சொன்னுள். உடனே பிள்ளைகள்எல்லோரும் மவுனமானுர்கள்.

அப்போது துக்கவதனத்துடன் தோன்றிய அந்தஸ்திரி இனிமையான ஓர்குரலில் செபமொன்றைச் சொல்லித் தேவஆசீர்வாதத்தை வேண்டிநின்ருள். அதன்மேல் எல்லோருக்கும் சூப் பரிமாறப்பட்டது. ஆனுல், என்ன ஆச்சரியம்! முதன்முறை எல்லோரும் சூப் குடித்துமுடிந்ததும் இன்னும் சட்டியில் பாதிச்சூப் எஞ்சியிருந்தது. அதனுல், எல்லோருக்கும் மற்றுமோர் தரம் பரிமாறப்பட்டது. ஆகவே, அன்றுதினம் யாவரும் இருமடங்கு சூப் குடித்ததுமன்றிச் சூப்பும் இதற்குமுன் ஒருநாளுமே அத்துணை ருசியாய் இருந்ததில்லையென்று கூறி மகிழ்ச்சியடைந்தார்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமையான சகோதரங்களே!

முதல் ஆங்கில வேதசாட்சி யார்? அர்ச். அல்பன். அவருடைய திருச்சடலத்தின் என்புகளை ஒருசமாதியில் பொதிந்து வைத்தார்கள் பதினேராம் நூற்ருண்டிலிருந்த ஆங்கிலக் கத்தோலிக்கமக்கள்.

அச்சமாதி அழகான வேலைப்பாடுள்ளது. பொற்தகட்டில் சுத்தவாளரின் உருவங்களும், சரித்திரக் காட்சிகளும் பொறித்து, அச்சமாதியை அலங்கரித்து வைத்தார்கள் வல்லுனரான சந்நியாசிகள்.

அந்த உருவங்களை இன்னும் அலங்கரித்துச் சமாதியை அழகாக்கும் கருத்துடன் இன்னும் பலசித்திரத் தகடுகளும் வைரங்களும் பதிக்கப்பட்டன. அச்சமாதிக்குமுன் மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருக்கும்போது அச்சுடர் அவ்வைரங்களில் பிரதிபலித்து ஆயிரங்கண்கள்போற் சொலித்துக் கொண்டிருக்கும்.

பொன்னுல் மாத்திரமல்ல வெள்ளியாலும் கூடங்கள் கோபுரங்கள்செய்து அந்தச்சமாதி அலங்கரிக்கப்பட்டது. சமாதிக்கூரை எகிப்திய "பிரமிட்"— அதாவது முக்கோணக் கோபுரம்போல் உயர்ந்திருந்தது. நான்கு பக்கங்களிலும் நான்கு கோபுரங்கள்; அவைகளின் உச்சியில் ஓர்பளிங்குவட்டம். மடாதிபர் ஒவ்வொருவரும் தம்மால்இயன்றளவு அச்சமாதியை அலங்கரித்தார்கள்எனில் அதன் அழகைக்கூறவும் முடியுமா?

வந்தது மதப்புரட்சி. எட்டாம் ஹென்றிகாலத்தில் குரொம்வெலின் ஏவலாட்கள் கண்களில் அச்சமாதிபட்டது. "மூடப்பக்தி" யென அச்சமாதியை அழித்தார்கள். அதிகமான பொன், வெள்ளி, வைரங்களையெல்லாம் அரசன் கைப்பற்றினன். திருப்பண்டங்கள் அழிக்கப்பெற்றன. அச்சமாதியைச் சுக்குநூருக்கினர்; ஏறக்குறைய 2,000 துண்டுதுணுக்குகள். மாதாபீடத்தை மறைத்துச் சுவர்ஒன்றுகட்டினர்.

1872-இல் அவ்வாலயமணியங்கள் மாதாபீடத்தைத் திருப்பிக்கட்டஎண்ணி அச்சுவரை இடித்தபொழுது அதில் சமாதியின்துண்டுகள் வைத்துக்கட்டப் பெற்றிருந்ததைக் கண்டனர். ஒவ்வொன்ருக 2,000 துண்டுகளைப் பொறுக்கியெடுத்து ஒவ்வொன்ருகப் பொருத்தி அச்சமாதியை அமைத்தனர்.

திருப்பண்டம்இல்லை. ஆனுல், அது வைத்திருந்த சலவைக்கற் பேழையும், அதனருகில் உள்ள மரக்கோபுரமும் இங்கிலாந்திலிருந்த கத்தோலிக்கமக்கள் தமது முதல்வேதசாட்சியை எவ்வளவாகக் கனம்பண்ணினுர்எனச் சாட்சிபகருகின்றது.

அன்புள்ள
அண்ணு.

—(‿)—

## சுகம் எங்கே?

(ச. ம. யோசெவ் றிச்சேட்)

சிறுமை எய்தினும் பெருமை கொள்ளுவான் — தன்
எளிமையில் அச்சம் மேல்காட்டான்
பொறுமையில் செம்மை பெறுபவர்க்கே — தூய
வழியது காட்டுவார் வல்லபரன்.

❀

இட்டது போதும் எனஇருப்பான் — தான்
பட்டது எல்லாம் பாடுரையான்
இட்டமுடன் பரன் தாள்பணிவான் — அவர்
கட்டளை களுக்குச் சிரம்பணிவான்.

❀

போதுமென்ற மனம் பூண்டுநிற்பான் — அதை
பொன்போல் என்றென்றும் ஆண்டுநிற்பான்
ஆதியாம் கடவுளின் அடிவருடி — அவர்
ஆசியை நிதமும் நாடிநிற்பான்.

❀

இம்மையிலே பலதுய ருறினும் — பின்
இறைவனி ஞட்டினில் இன்புறுவான்
செம்மலர்ப் பாதப் பரம்பொருளை — என்றும்
சிந்தனை பண்ணித் துதித்திடுவான்.

—(‿)—

## தாய்மாரின் உபகாரி

செனுர்க்கியா இத்தாலியில் ஓர் பட்டினம். நேப்பிள்ஸ் குடாவிலிருந்து ஐம்பதுமைல் தூரத்தில் சிறுகுன்றின்சாரலில் கட்டப்பெற்றிருக்கிறது. சிறியபட்டினமாயினும் கீர்த்திபெற்றது.

மாலைவேளை. பிள்ளைப்பேற்று வருத்தத்தில் தாயொருத்தி மிகவும் அம்பாயப்பட்டாள். தாயும் சேயும் மோசம்போகுமென்றே இனசனர் எண்ணினர்.

அருகிலிருந்த காட்டில் நாள்முழுதும் விறகுவெட்டிவிட்டு மடத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தார் தவத்தால்மெலிந்த சந்நியாசிஒருவர். அவர் இரட்சகர் சபைக்குச்சேர்ந்த சந்நியாசத்துணைவர். தாயின் அபயச்சத்தம் அவர்காதுக்கு எட்டியது. தன் குழந்தையை எண்ணித்தான் அவள் கவலைகொண்டாள்.

"ஜெரூட் சகோதரனே! உதவி செய்யும். என்குழந்தையைக் காப்பாற்றும்" எனக் கெஞ்சினுள்.

காப்பாற்றியே விட்டார். அவருடைய செபத்தின்பலனுகத் தாயும் சேயும் உயிர்பிழைத்தது மாத்திரமன்று, வயோதிக வயதுமட்டும் சுகசேமமாய் வாழ்ந்தார்கள்.

செனுர்க்கியமக்கள் அன்றுதொட்டு அவரைச் 'சுத்தர்'என அழைப்பர். அவர்கள் மாத்திரமா? உலகத்தில் பலமக்கள் இப்பொழுதும் அவரை அப்படி அழைக்கின்றனர்.

ஐம்பது வருடங்களின்முன் அர்ச்சியசிட்ட பட்டம்பெற்ற அர்ச். ஜெரூட் மஜெல்லா இத்தாலியில் மூரேருகிராமத்திற் பிறந்தார். இவர் நான்கு சகோதரரில் அதிகஇளையவர்; ஒரேமகன். தகப்பன் தையற்தொழில்.

சிறுவயதிலே அற்புதங்கள்பல காணப்பட்டன. நான்குவயதாய் இருக்கும்போது பாலகயேசு அவருடன் கூடவிளையாடுவதை ஜெரூட்டின்தாயார் கண்டாள். மாதாவின் சுரூபம் உயிர்பெறுவதையும், கையிலிருந்தகுழந்தை இறங்கிவந்துமகனுடன் விளையாடுவதையும் ஜெரூட்டின் தாயார் ஓர்மூலையிலிருந்து கவனித்தாள்.

பதினைந்துவயதில் ஜெரூட் மேற்றிராணியார் இல்லத்தில் பணியாளனுய் அமைந்தார். பாலகயேசுவில் அவர் கொண்டிருந்தஅன்பு குறையவில்லை. மார்கழிமாதக் கடைசிநாட்கள். ஜெரூட் புல்லணையிலிருந்த பாலயேசுவின்சுரூபத்தைக்கொண்டு தெருவீதியில் ஓடோடியும் செல்வதை மக்கள் இமைகொட்டாமற் பார்த்து ஆச்சரியப்பட்டனர். அன்று அதிகாலையில் பட்டினத்துக் கிணற்றுக்குப் போயிருந்தார். ஒரு வாளிதண்ணீர் அள்ளுவதற்குக் குனிந்தபொழுது சட்டைச்சாக்கிலிருந்த திறப்புஒன்று கிணற்றுக்குள் விழுந்துவிட்டது. திறப்புத்தேவைப்படுமே! யார் உதவுவார்? ஆம்! திருக்குழந்தைதான். பாலயேசுவின் சுரூபத்தைக் கோயிலிலிருந்து எடுத்துவந்து [illegible] கிணற்றுள் இறக்கினர். திரும்பி அதை இழுத்துஎடுத்தபொழுது சுரூபத்தின் சிறுகையில் திறப்புஇருந்தது. (வளரும்)

—(‿)—

## இனிமேல் இருந்துபாருங்கள் அம்மா!

ஆறுவயது நடக்கிறது. பெற்றேருடைய அல்லது மற்றேருடைய எண்ணத்திற்கு ஒன்றும் ஆடாது. நான் விரும்பினுல் செய்வேன், அல்லது இல்லைத்தான். என்னுடைய குறும்புத்தனத்தைக்கண்டு கோபித்துக்கொள்வாரில்லை. என்னுடைய குறும்புகளே அநேகருடைய பொழுதுபோக்கு. அம்மா ஏதும்சொன்னுல் சும்மாஇருங்கோ என்பேன். கையில் வேலை, அதை எடுத்துக் கொண்டுவா என்ருல், நானும் கையில் வேலையாகஇருக்கிறேன்; இப்போது நேரமில்லை; மண்வீடு கட்டுகிறேன் என்பேன். தண்ணீரை வார்த்துக்கொண்டுவா என்ருல், குடத்திலுள்ள தண்ணீர்முழுவதையும் அப்பா ஓய்வுநேரப் பொழுதுபோக்காகச்செய்யும் வீட்டுத்தோட்டத்தில் ஊற்றுவேன். தோட்டத்திற்கு ஊற்றவோடா நெஞ்சுமுறியத் தண்ணீர் அள்ளி வைத்தேன் என்று அம்மா உரக்க, உரக்கஇரைவா. அவ்வளவுந்தான். ஒருபோதும் அடிக்கமாட்டா. அவ்வளவுமெத்த அன்பு. ஏனென்பதும் எனக்குத் தெரியும். அண்ணனுக்கு வயது ஐந்து. எடுத்ததற்கெல்லாம் அடிபோடுவா. அவருக்கு மூன்றுநாள் சுரம்வந்தது. நான்பிறப்பதற்கு ஒரு ஆண்டின்முன்னமே ஆண்டவனிடத்தில் போய்விட்டார்.

உடுத்திக்கொண்டேன். சப்பாத்துப் போட்டுக்கொண்டிருக்கும்போது அப்பா வந்துவிட்டார். நானுகை அம்மாவிடத்தில்சென்று தேநீரை வாங்கி அப்பாவிடங் கொடுத்தேன். தாமதித்தால் உலாத்த முடியாதென என்மனம் உறுத்திக்கொண் டிருந்தது. அப்பா தேநீர்குடித்துமுடிய அம்மாவும் என்குறும்புகளைச்சொல்லிமுடித்தா. டம்ளரை அம்மாவிடம் நீட்டும்போது என்னையும் ஓர்முறை முறைத்துப்பார்த்தார். ஆனுல், அடக்கமுடியா நகைப்பை அவரால் மறைக்கமுடியவில்லை. என்னஜீவா கேட்கிருய்? ஆயத்தமா? என்ருர்.

நல்லகடற்கரை. காட்சிக்குரியது. கடலை வணங்கி, வணங்கிஎழும்பும் சோலைமரங்கள் அதன்எதிரே நிறைந்திருந்தன. அதன் ஓர்மூலையில் அழகிய தேவமாதாவின் கோயிலொன்று தலைநிமிர்ந்து கடற்பிரயாணிகளுக்குத் திசைகாட்டும் தீபஸ்தம்பம்போல் நின்றது. ஒன்றரைமைலும் ஒன்றரைநிமிஷப் பிரயாணம். அவ்வளவு இன்பகரமான உலாத்து. அப்பா குறைந்தது பதினைந்து நிமிஷம்என்ருலும் கோவிலில் செலவழிப்பார். நான் அங்குமிங்குமாகத்தோன்றும் சுரூபங்களையும், படங்களையும் மாறிமாறிப்பார்ப்பதும், சோலையில் காற்றுக்குடிக்க வரும் சிறுவர்களோடு மல்லுப்பிடிப்பதுமாக இருப்பேன்.

நல்ல புழுக்ககாலம். பங்குனிமாதம் முடிகிறது. நின்றநிலையில் எட்டுத்திக்கும்கண்ணடித்தேன். சோலையில் என்சோடுகளைக் காணவில்லை. முற்ருகக் காணவில்லை. கோவிலைச் சுற்றி வட்டம்போடத் தொடங்கிவிட்டேன். கோவிலுக்குப்பின்புறத்தில் ஒருசிறியஅறையில், கிழடுபற்றிய சுவாமியைவளைத்துச் சிறுவர்கள் நின்ருர்கள். மிகவும் ஆரவாரத்தோடும், சந்தோஷத்தோடும் காணப்பட்டார்கள். ஊடறுத்துக் கொண்டு உள்ளேபோனேன். சுவாமியார் குழந்தையேசு தாயாருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தாதைக்கும் அமைந்து குற்றேவல்செய்யும் படத்தைக்காட்டி, பிள்ளைகளே! சர்வவல்லபமுள்ள சர்வேசுரனின் மனிதஅவதாரம் இது. எவ்வளவு பெரியவர். என்னையும் உங்களையும் படைத்தவர். தன் தாயையும், கைத்தாதையையும் உண்டாக்கினவர். அவருடைய அமைச்சல் எவ்வளவு பெரியது. கடவுள் மனிதனுக்கு அமைகிறார். ஏன் அமைகிறார்? எங்களுக்காக அமைகிறார். தம்மைப்படம்பிடித்து வாழும்படி கேட்கிறார். அமைச்சல் என்னும் புண்ணியமில்லாமல் இரட்சணியம்அடைய இயலாதென்று காண்பிக்கிறார். நீங்களும் சின்ன யேசுவைப்போல் வாழவேண்டும். உங்கள் பெற்றோருக்கு அமைய வேண்டும். அவர்கள் கட்டளைகளை ஏந்திஎடுக்கவேண்டும் என்றார். ஆரோ என்குறைகளை முறையாக எடுத்துவாசித்ததுபோல்இருந்தது. என்மூளையில் பெரியகலவரம்நடந்து ஒருமுற்றுக்கு வந்தது. இனிமேல் இல்லையென்று வாக்குக்கொடுத்துவிட்டேன். எழுத்துமறையும் சமயம் ஜீவாஎன்று ஒருகுரல் விரைவாக வந்தது. உடனே உத்தரவு பெற்றுக்கொண்டு கிளம்பிவிட்டேன், வீடுபோகுமட்டும் சின்ன யேசுவைப்போல் அமையவேண்டும்; பெற்றோர் வார்த்தைகளை ஏந்தி எடுக்க வேண்டுமென்னும் இரண்டு வாக்கியங்களும் சுழன்று மிதந்தன.

என்னுடைய மவுனமான உலாத்தைக்கண்டு அப்பா அதிசயித்தார். ஆனால், ஒன்றும் பேசவில்லை. களைப்பினால் அலுத்துப்போய் விட்டானென்று எண்ணியிருந்தார்,

உடுப்புக் கழற்றவில்லை. ஓடி வா ஜீவா; அடுப்புக்கு வைக்க விறகு எடுத்துவாஎன்று அம்மா அதட்டினாள். நான் கட்டளைக்கு அமையாவிட்டாலும், அம்மா கட்டளைகொடுக்கத் தவறமாட்டா. சொல்வதும் அவதான், செய்வதும் அவதான். ஆனால், அன்று எதிர்மாறாக விறகை எடுக்கஓடினேன். அப்பா விறைத்துப்போனார். நான் போகிறேன். நீ களைத்துப்போனாய் என்றார். இல்லை நான் சின்னயேசுவைப்போல் அமையப்போகிறேன், சின்னயேசுவைப் போல் நடக்கப்போகிறேன் என்று வாய்ஓயாமல் புலம்பிக்கொண்டு, ஓடோடி விறகைஎடுத்துக்கொண்டு வந்து, "அம்மா! இப்படித்தான் சின்னயேசுவும் பெற்றோருக்கு உதவிசெய்தார். கைத்தாதைக்கு மரத்துண்டு எடுத்துக்கொடுத்தார். தாயின் கட்டளைகளை ஏந்திஎடுத்தார். இன்றைக்கு எங்கள்பெரிய சுவாமியார் படங்காட்டிச் சொல்லித்தந்தார். இனிமேல் இருந்து பாருங்கள்" என்றேன். பேரின்பநாதனும், பாக்கியவதியும் மலர்போன்ற ஜீவாவின் சிவந்தகன்னங்களை உறிஞ்சிக்குடித்தனர்.

— ஆனந்தம்

# Educational (Girls Only)

For Commercial Certificate and Shorthand Typists Examinations contact

M. M. Thuraisingham.

20, Third Cross Street,
Jaffna.

## கிராமச்சங்க தேர்தல்கள்

கழுத்துறை, மாத்தளை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், திரிகோணமலை, புத்தளம்முதலாம் ஆறுபெரும்பிரிவுகளிலே சென்றஜூனிமாதம் 30-ந் திகதியுடன் முடிவடையவேண்டிய அநேககிராமச்சங்கங்களின் பதவிகாலம் அடுத்துநிகழும் 1959-ம்ஆண்டு தைமாதம் 31-ந்திகதிவரை நீடிக்கச்செய்து விடப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணப்பெரும்பிரிவிலே அச்சுவேலி, கட்டைவேலி, முள்ளிப்பற்று, உடுப்பிட்டிக் கிராமச்சங்கங்கள் முன்கூறியவற்றில் அடங்கியுள்ளன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1574

வண்ணார்பண்ணை மேற்கு
முருகேசு பொன்னுத்துரை
பெண் தங்கம்மா

— வழக்காளி

எதிராக:

(1) வண்ணார்பண்ணை மேற்கு, அப்துல் காதர் முகம்மது மீராசகிப்பும்,
(2) பெண் சகிறு உம்மாவும்.

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 1574-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1958-ம் ஆண்டு ஆடிமாதம் 31-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1,313-50 உம், 4-4-57 தொடக்கம் 12-12-57 வரைக்கும் ரூபா 1000 க்குப் 12 வீத வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபா 211-22உம்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "தாளப்புலம்" பர. நி. இலா. ஒன்றும் எட்டில் மூன்றும் (பர. நி. இலா. $1\frac{3}{8}$), செய்பயிரும், வீடும், கிணறும். எல்லை, கிழக்கு: சேகு முகம்மது யூசுவுக்கும், பெண் சலேகா உம்மாவுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு: செய்யது அலிபீர் அப்துல் அலீம் சகிப் ஆண்டவர் அவர்களுக்குரிய தர்மசாதன ஆதனம். மேற்கு: வாய்க்கால். தெற்கு: ரேட்டு. இதடங்கலிற் சொரியலாய் அவைவாசியில் சொரியலாய் பர. நி. இலா. அரையும் ($\frac{1}{2}$), கல்வீடும், அதற்குச் சேர்ந்தவைகளும்.

தி. ந. ஆசீர்வாதம்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
நம். 21, 2-ம்குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
26–6–1958

## நன்றித்துதி

நான் ஒருநிரந்தர உத்தியோகமில்லாது பலவிதமான கஷ்டங்களினாலும் சுற்றிவளைக்கப்பட்டு, அண்டஓர் ஆதரவுமின்றி வாடினேன். இப்படியானநிலையில் அர்ச். யூதாததேயுவின் புஸ்தகம்ஒன்று எனது கைக்குக்கிட்டியது. அதிலே 'யாவராலும் கைவிடப்பட்டவர்களின் மத்தியஸ்தரான அர்ச். யூதாததேயுவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்' என்ற சிறு செபம் எனக்கு நம்பிக்கையைத் தந்தது. அவரது செபத்தை விசுவாச நம்பிக்கையுடன் ஓதிவந்தேன். என்ன ஆச்சரியம்! ஒரு மாதகாலத்துள் நான் கேட்டுக்கொண்டபடி எனக்கு ஒரு நிரந்தர உத்தியோகம் கிடைத்துவிட்டது. உலக மக்களுக்கு இந்தவல்லபமுள்ளஅர்ச்சியசிட்டருடைய மகிமையைப்பரப்பும் நோக்கமாக இதைப் பிரசுரிக்கிறேன். இதைக் கண்ணுறும் யாபேரும் இந்தப் பரிசுத்தரில் நம்பிக்கை வைத்து அவரின் அற்புதத்தை அறிவார்களாக. இவரதுநாமம் சதாகாலமும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி சம்பளையில் இவர்பேரால் கட்டப்படும் ஆலய நிதிக்கு என்னால்இயன்ற சிறுஉதவியைச் செய்கிறேன். "அர்ச். யூதாததேயுவே! திக்கற்றவரின் உதவியே! சஞ்சலத்தில் எம்ஆதரவாயிரும்."

அர்ச். யூதா ததேயுவின்
நம்பிக்கையுள்ள அடியாள்
முருங்கன் யேசுமலர்

# "பரலோகத்தின் வாசல்"

மோட்சத்தையும் பூலோகத்தையும் இணைக்கும் கால்வாயாக இருப்பவளே நமது தேவதாய். அக் கால்வாயிலிருந்தே வரப்பிரசாத ஊற்றுக்கள் மக்களை வந்தடைகின்றன. அக்கால்வாயினூடாகத்தான் நாம் ஒருநாள் நித்தியசீவியத்தை அடையமுடியும்... எல்லாவற்றிற்கும் மேலாக அவள் பரலோகத்தின்வாயிலாக இருக்கிறாள். ஏனெனில், மோட்சத்தின் அரசர் அவளிடத்திலிருந்தே உதித்தார்.

கத்தோலிக்கர், ஞானஸ்நானத்தின்மூலம் தேவதாயின் சிஷனாயில்லாமல் யேசுக்கிறிஸ்துவின் சிஷனாயிருக்க முடியாது. அல்லது தன்னை அவளுக்கு அர்ப்பணிக்காமல் கிறிஸ்துநாதருக்குத் தன்னை அர்ப்பணிக்க முடியாது. ஆகவே, நாம் கடவுளின் உதவியை நாடவேண்டுமாயின் அக்கன்னிமரியாயின் மூலமாகவே அவரை அண்டமுடியும்.

மேலும், தேவதாயே நம்மை மோட்சபாதையில் நடாத்தி நாம் மோட்சம் அடைய ஊன்றுகோலாயிருக்கிறாள். அவள் தான் பாவிகளின் ஆத்துமங்களின் ஆதரவும் அடைக்கலமுமாயிருக்கிறாள். மேலும், சருவேசுரனுக்கும் மனிதருக்கும் இடையில் சமாதான தூதுவளாயிருக்கிறாள். நாம் மோட்சத்தை அடைய மனதார விரும்பினால் தேவதாய் நமக்கு மோட்சத்தை அடைய உதவியாக நிற்பாள். அவசியமானால் நமக்குவேண்டிய அருள்களையும் பெற்றுத்தருவாள்.

ஆனால், நாம் நமது பாவங்களுக்கு மனஸ்தாபப்படாமல், தேவதாய் நமக்கு மோட்சத்தை அடைய உதவியாயிருப்பாள் என்பது மூடநம்பிக்கை. ஏனெனில், யேசுநாதர்தாமே "நித்திய சீவியத்தில் பிரவேசிக்குமுன் கற்பனைகளின்படி நடக்கக் கடவாயாக" என்று கூறியுள்ளார். ஆகையால், நாம் நமது தாயை நேசித்து, அவளுக்குத் தகுந்த மரியாதைசெலுத்தி அவளைத் துதித்து வணங்குவோமாக.

நாம் பாவச்சேற்றில் ஊறி, மோட்சபாதையினின்று தவறி விலகிவிட்டால் நமது தாய் நம்மைக் கைவிடமாட்டாள். ஏனெனில், அவள் தவறிப்போய் விழுபவர்களுக்கு ஊன்றுகோலாயிருக்கிறாள். ஆதலால், நாம் பாவ மன்னிப்பைப் பெற நம் தாய் நமக்கு உதவிசெய்து, கடைசியில் ஒருநாள் நம்மைத் தன் திருக்குமாரனண்டை கூட்டிச் சென்று நமக்கு நித்திய சீவியத்தைப் பெற்றுத் தருவாள்.

யோசப் பெனடிக்ற்

## திருமணம்

யாழ்ப்பாணம், பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா மேற்றிராசனக்கோவில் உபதேசியாராய்க் கடமைபுரிந்து இளைப்பாறி, தற்போது யாழ்ப்பாணம், சென் வின்சென்ற் டீ போல் தருமசபை, சஞ்சூசையப்பர்பந்தியின் காரியஸ்தராயிருப்பவரும், புலோலி, கரவெட்டிக்குச்சேர்ந்த பிரபு வேளாளரான திரு. நமசிவாயம் வாரித்தம்பி அவர்களின்புத்திரராய் வண். கிழக்குக் கந்தர்மாமடத்தடியில் புகழ்பெற்று வாழ்ந்திருந்த திரு. மயில்வாகனம் அருளம்பலம்அவர்களின் ஏகபுதல்வருமான திரு. மிக்கேற்பிள்ளை (சுப்பிரமணியம்) அவர்களின் இரண்டாவது புதல்வரும், தற்சமயம் யாழ்ப்பாணப், பெரியதபாற்கந்தோரில் உத்தியோகம் வகித்திருப்பவருமான திரு நிறைசெல்வன் எம். ஏ. ஜே. துரைராசா அவர்களுக்கும்,

வசாவிளான்கிழக்கு, ஒட்டகப்புலம் வேளாண்மரபினரான ஜெயில்காட் சூசைப்பிள்ளை சின்னப்பு அவர்களின் புத்திரியும், அவ்வூர்ப்பிரசித்திபெற்ற வைத்தியராகிய திரு. சமத்தர் அவர்களின் பீட்டியும், நெடுங்காலம் மாட்டின் வீதியில் வசிப்பவரான வியாபாரியார் எண். எம். சவிரிமுத்து அவர்களின் பேர்த்தியுமாகிய திருநிறைசெல்வி எஸ். இராசம்மாவுக்கும் சென்ற 7-6-58 சனிக்கிழமை காலை பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா ஆசனக்கோவிலிலே கட்டளைக்குரவர் வண். ஜோண் மேரிசுவாமியவர்களால் மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேற்றிவைக்கப்பட்டது. பூசையின்பின்னர் புதிய தம்பதிகள் மலர்மாலைசூட்டப்பட்டு, மோட்டர்ரதரூடாய் மணமகள் இல்லத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு பரிமளிப்பான உபசாரணை நடந்தேறியது. அவ்வமையம் செவாலியர் எஸ். அருளானந்தம்அவர்களும், ஆசிரியர்கள்: எஸ். அந்தோனிப்பிள்ளை, ரி. கே. அமிர்தநாதர், எஸ். சாமிநாதர் என்போரும் மணமக்களது குல, குணநலன்களைப்பாராட்டி வாழ்த்துக்கூறி நின்றனர். பின்னர் நன்றியுரைகளுடன் உபசாரணை இனிதுநிறைவேறியது.

மணமக்கள் பல்லாண்டு வாழ்க!

## நேர்ஸ் பிலோமினா

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

மாதமாக அதனைக்கொள்வது தகுதியாகுமென்று நானகருதவில்லை. அதனால், இதுமுதல் அதனைஓர்மறக்கப்பட்டசம்பவமாக நினைந்து முற்றாக அதை மறந்துவிடுமாறு தங்களை வினயமாக வேண்டுகின்றேன்.

பீற்—மறக்கப்பட்ட ஓர்சம்பவமா? அதனை நான் மறப்பதா? மறந்திருக்கவும் முடியுமா? இல்லை. ஒருபோதும் இல்லை. நேர்ஸ் பிலோமினா என்னும்நாமம் எனது இதயத்தில் பசுமரத்தாணிபோல் நன்றாகப் பதிந்துவிட்டது. இனிமேல்அதனை எவருமே அழிக்கவும்முடியாது. அகற்றவும்முடியாது. தங்கள்மட்டிலே எனக்குள்ள நன்றிக்கடனேபெரிது! ஆனமட்டில் அதனைத்தீர்க்கத்தான் வேண்டும், அம்மா! நீங்கள்சொன்னது முற்றும் சரி. ஒருநாளைக்கு அவவை எங்கள் மனைக்கு அழைத்துச்சென்று விருந்திட்டுஉபசரித்து ஏதோ ஒருசன்மானமும் செய்துவைக்கத்தான்வேண்டும். அம்மாவின் கேள்விக்கிசைந்து தாங்கள் வரத்தான்வேண்டும்.

(தொடரும்)

## நன்றித்துதி

ஆபத்தில் அகப்பட்டுத் தயங்கியபோது நான் அர்ச். யூதா ததேயுவின் நவநாட் பக்திமுயற்சியை அனுசரித்து வந்தேன். எனது மன்றாட்டுச் சீக்கிரத்தில் அனுகூலமானது. "அர்ச். யூதாததேயுவே! உமது சலுகையை இரந்து கேட்கிறவர்கள் யாவருக்காகவும் வேண்டிக்கொள்ளும்."

பக்தன்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 3-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org